# திராவிடநாடு

விலை 2 அணா

மலர் 12 | 5—7—53 | இதழ் 1


# அந்த 'மனோகரி!'

ஆறு வடத்தில் தங்கச் சங்கிலி ஒரு நாள், அழகான வைரபேசரி மற்றோர் நாள், ஐந்து விரல்களுக்கும் மோதிரம் இன்னோர் நாள்,—இவ்விதம், 'காணிக்கை,' செலுத்திக்கொண்டிருந்தான், அந்த வாலிபன். மாடிவீட்டு மனோகரி மீது, அவ்வளவு மையல். வரிசைகள் வழங்கிய வாலிபன், சீமானல்ல! தினப்பட்டினி!! எனினும், வட்டிக் கடைக்காரன் தயவால், 'காணிக்கை'களைச் செலுத்திக்கொண்டிருந்தான், அக்கன்னிக்கு. பரிசுகளைப் பெறும்போது, புன்னகை பூப்பாள் — பூரித்துப் போவான். இந்தப் புன்னகைக்காகவா, இவ்வளவு பொருள் நஷ்டம்? — என்று யாராவது கேட்டால், 'உனக்கென்ன தெரியும்! எனக்கும் அவளுக்குமிருக்கும் காதல்!' என்று கூறிக்கொள்வான். மனோகரியைக் கேட்டாலோ 'எனக்கும் அவனுக்கும் ஏணி வைத்தாலும் எட்டுமோ? ஏதோ, வந்த வரைக்கும் லாபம்! நாளைக்கு, எனக்கு கணவன் வந்ததும், இந்தப் பொருள்கள் எனக்குப் பயன்படுமல்லவா?' என்று சொல்லுவாள். மையல் கொண்டவனோ, மாலை வந்ததும், மாடிக்குக் கீழ் நிற்பான்! மனோகரி, வழக்கம்போல புன்சிரிப்பு வீசுவாள்!—பொருள், போகும். ஆனந்தத்தோடு, திரும்புவான், அன்னக்காவடி.

*

எங்கே நடக்கிறது, இந்தக் கதை என்று கேட்பீர்கள். வேறெங்குமல்ல, நமது விசித்திர பூமியாம், பாரதத்திலதான். மனோகரி, மாடி வீட்டிலிருக்கிறாள்! அவள் மீது மையல் கொண்ட பண்டிதநேரு, 'அவளுக்கு' பொருளைக், கொட்டிக் கொடுத்தவண்ணம் இருக்கிறார். "ஏன், இது? நாம்தான் அன்னக்காவடியாயிற்றே!" என்று கேட்டால், "மனோகரியைப் பிரிய மனமில்லை. அவளை, இழப்பதா? அதற்காகத்தான் செலவு செய்கிறேன் — பணமில்லைதான். அதனால் என்ன? பணம் தர அமெரிக்கா, இருக்கும்போது, என்ன கவலை!" என்று பதில் தருகிறார். இந்த விசித்திரங் கண்டு கேலிசெய்வோர், பலர்—சூதாட்டம் எனச் சொல்பவர் சிலர்—துணிந்து தடுக்க முயன்றோர், ஒரு சிலர். அவ்விதம் முயன்றோரில், ஒருவர், உயிரையே இழக்க வேண்டியவரானார்—நேரு, தனது வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் கிளம்புமுன், 'மனோகரியின்' வீட்டு வாயிலில் மூன்று நாள் 'தவமிருந்து' விட்டுச் சென்றார்! அவள் மனம் இசையவில்லை!! அதற்குத் தூதாக அபுல்கலாம் ஆசாத்தை அந்த வீட்டுக்கு, அனுப்பிவிட்டு, வெளிநாடு சென்றார். திரும்புவதற்குள், நேருவின் முன்னாள் சகா, ஒருவர், மனோகரியின் மமதையைத் தடுக்க முயன்று, மரணமடைந்துவிட்டார். அந்த மாவீரராம் — சியாம்பிரசாத் முகர்ஜி-க்கு, அனுதாபம் காட்டி, நாடெங்கும், கண்டனக் கூட்டங்கள் நடைபெற்றவண்ணமுள்ளன. மனோகரி, மாடிமீதுதான், நிற்கிறாள்!

*

பர்தோலி வீரர் பட்டேலின் வாழ்நாளில், இந்தியாவில் துண்டுதுண்டாகக் கிடந்த, சமஸ்தானங்களையெல்லாம், ஒன்றாக்கி, இந்திய யூனியனுக்குக் கட்டுப்பட்டதாக ஆக்கினார், என்று புகழப்பட்டார். தனிக்கொடி இல்லை — தனி நாணயசெலா

வணி கிடையாது [illegible] 'மன்னர்' போய்விட [illegible] 'திமிர்' அடக்கப்பட்டு [illegible] — என்றெல்லாம், சொல்லுகிறார்கள். உண்மையுங்கூட [illegible] மேடைகளில் பேசு [illegible] காங்கிரசின் சாதனைகளை [illegible] முனையும்போது, இந்த விபரத்தை, நாலுமுறை, அழுத்தந்திருத்தமாகக் கூறத் தவறுவதில்லை — "என்னப்பா! எத்தனை சமஸ்தான ராஜாக்கள் இருந்தார்கள். எல்லோரையும் ஆட்டிவைத்து, தன் கீழ் கொண்டு வந்துவிட்டது. இதைச் செய்தது, யார்? எங்க சர்க்கார்" என்று பெருமிதத்தோடு பேசத் தவறுவதில்லை—அவர்களும் வெட்கப்படக்கூடிய, சமாசாரம் பண்டிதரின் மையல் காரணமாக மாடிவீட்டு 'மனோகரி' உல்லாசமாக நம்மைக்கண்டு கேலி செய்கிறாள்! ஆம்—அந்த மனோகரியும் ஒரு சமஸ்தானம்தான்! அந்த சமஸ்தானத்துக்கென்று, ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டிச் செலவழித்துக் கொண்டிருக்கிறோம் — எனினும், அந்த சமஸ்தானம் இறுமாப்புடன் விளங்குகிறது. பேருவை மிரட்டுமளவுக்கு வளர்ந்து நிற்கிறது!

இந்தியாவின் உதவி பெறும் இடம்—இந்திய பூமியில் தொடர்பு கொண்ட சமஸ்தானம்—என்றெல்லாம் கூறுகிறாய், எனினும் இவ்வளவு திமிரோடு இருப்பதாகச் செப்புகிறாயே? முடியுமா, அச்சிறு சமஸ்தானத்தால்! விடுவாரோ, எமது பண்டிதர்!!—என்று கேட்கலாம் சிலர். ஆம்! ஆம்!! அவருக்கு அவ்வளவு மையல்—அதனால்தான் விழிக்கிறார். காரணம், அவளோ, மனோகரி, அதுவும் மாடிவீட்டிலிருப்பவள்!

✳

தனக்கென ஓர் தனிக்கொடியுண்டு.

தன்னுடைய வரிப்பணத்தின் வரவு செலவை மத்ய சர்க்காரிடம் காட்டவேண்டிய அவசியம் கிடையாது.

தன்னுடைய அரசியல் திட்டத்தைத்தானே வகுத்துக் கொள்ளலாம்.

இவ்வித உரிமைகளோடு, இருக்கிறது—அந்த ராஜ்யம். எனினும் இந்திய சர்க்கார் அதற்கு ஏராளமான பண உதவி [illegible] கிறார்கள்—கொண்டாடுகிறா[illegible] — குதூகலிக்கிறார்கள்.

தனிச் சுதந்திரத்தோடு மட்டுமல்ல — அது விளங்குவது. என்னென்ன சட்டதிட்டங்களோ, அந்த ராஜ்யத்தின் சட்டங்களை மலைபோல் விருக்கும் இந்தியாவால் ஒரு சிறிது கூட அசைக்கமுடியாது.

அந்த ராஜ்யத்திலிருக்கும் யாரும் இந்திய பூமிக்குள் நுழையலாம் — எங்கு வேண்டுமாயினும் செல்லலாம்.

ஆனால், இந்திய யூனியனிலிருக்கும் எவராவது அந்த ராஜ்யத்துக்குள் செல்லவேண்டுமென்றால், 'பேர்மிட்' வாங்கவேண்டும். இல்லையேல், கைது செய்யப்படுவர்!

இவ்வித சட்டங்களோடு 'தனி உரிமை'யுடன் வாழ்கிறது அந்த ராஜ்யம்.

இந்த உரிமையை, அந்த ராஜ்யம், அனுபவிக்கலாமா? கூடாதா? என்பதல்ல, நமது விவாதம்.

இவ்வளவு, தனிச் சுயேச்சையுடன், வாழவிரும்பும் அந்த ராஜ்யம் இழுத்த இழுப்புக்கெல்லாம், தலை வணங்குகிறாரே, பண்டிதர் அது ஏன்?

கேட்டால், 'மனோரம்யமிக்க இடம்!' என்கிறார். உண்மைதான்—மறுக்கமுடியாது — அழகான மலைகள்! கண்ணைக் கவரும் ஏரிகள்! எல்லாம், நிரம்பியதுதான்.

அதற்காக உதைக்க உதைக்க, ஓடி ஓடித் தழுவவேண்டிய அவசியம் என்ன? இங்கே மக்கள் தவித்தால், 'பணமில்லை' என்று கைவிரிப்போர், அங்குமட்டும் கோடி கோடியாகக்கொண்டு குவிப்பதேன்? — இலாபமுண்டா! இலாபம் ஏற்படும் எனும் நம்பிக்கையாவது உண்டா!!

✳

காஷ்மீர் — இந்த இடத்தைத்தான், 'மாடிவீட்டு மனோகரி' யென்றோம். காஷ்மீரத் தலைவர், ஷேக் அப்துல்லா, கிடைத்தவரையில் இலாபம் எனும் கருத்துடன், இந்தியாவுடன் குலாவுவது போல் நடித்துக் கொண்டுள்ளாரே தவிர, காஷ்மீரைத் தனியரசாக்குவதற்கு, என்னென்ன வழி வகைகள் உண்டோ, அத்தனையும் செய்து கொண்டுவருகிறார்.

ஆனால்; நமதரும் பண்டிதரோ, பாகிஸ்தானிடமிருந்து காஷ்மீரைக் காப்பதாகக் கூறி, இந்தியப் பொக்கிஷத்திலிருக்கும் பணத்தையெல்லாம விரயம் செய்து வருகிறார்.

எத்தனை கோடி ரூபாய்கள்! எவ்வளவு வீரர்கள் பிணமாயினர்! எத்தனை முறை அமெரிக்காவுக்கு விஜயலட்சுமியையும் கோபாலசாமி அய்யங்காரையும் அனுப்பிவைத்தனர்! — என்ன பயன்? என்ன கிடைத்தது, இதனால்? — டாக்டர் முகர்ஜி பிணமானார்! எல்லையைத் தாண்டினார் என்பதற்காக ஷேக் அப்துல்லாவால் கைது செய்யப்பட்டுச் சிறை வைக்கப்பட்டு—சாகடிக்கப்பட்டார்.

ஒரு நண்பரின் பிணம்!—பண்டிதரின் கண்கள், இன்னும் திறக்கப்படவில்லை. பணமோ, பாழாகிக் கொண்டிருக்கிறது.

80 சதவிகிதம் முஸ்லீம்கள் வாழும், காஷ்மீரம், தனியரசோச்ச ஆசை கொண்டு விட்டது. அந்த ஆசைக்கு அதிபதியாகவும் ஆகிவிட்டார், ஷேக் அப்துல்லா. அவருடைய ஆசை, தவறானதென நாம், கூறவில்லை. காஷ்மீர மக்கள் தனிச் சுயேச்சையுடன் வாழவிரும்பினால்—வாழட்டும்—வாழ்த்துவோம்.

ஆனால், உலகராஜதந்திரியெனப்படும், பண்டிதர், ஷேக் அப்துல்லாவின் ஆசையை அறிந்தும், காஷ்மீர மக்களின் உள்ளப் போக்கை உணர்ந்தும், இன்னும் மையல் கொண்டு கிடப்பதேன்? 'மனோரம்யமான இடம்!', என்று வர்ணிப்பதேன்.

காஷ்மீரம், எத்தும் மனோகரியாகவும், அவளைப்பார்த்து ஏங்கும் அசனக் காவடியாக பண்டிதரும், இருப்பானேன்?

அப்துல்லா—பண்டிதரின் நண்பராயிருக்கலாம்.

காஷ்மீரம், பண்டிதரின் பிடியிலிருக்க விரும்பவில்லை?

ஒரு நண்பருக்காக, ஒரு உபகண்டத்தின் பொக்கிஷத்தை விரயமாக்குவதா, விவேகம்?

காஷ்மீரம், சிரிக்கிறது! உலகம் கேலி செய்கிறது!!

★

# சென்னை அழைக்கிறது!

சென்னை!—இப்போது எங்கு சென்றாலும், இரு வர்ணக்கொடிகளும், தி. மு. க. பாசறைகளும், கருத்தைக் கவருமளவுக்குக் காண்கிறோம்.

கருத்தாழமிக்க ஆலோசனை கூறுவதிலும், கழக இலட்சியங்களை மாற்றார் உள்ளத்தில் அன்போடு பரப்பும் ஆவல் மிக்கோரும், சென்னை நகரில் இருக்கின்றனர் — முன்பெல்லாம் அத்தகையோர் 'இருக்கின்றனர்' எனும் திருப்தி மட்டுமே இருந்தது. இப்போதோ, அத்தகையோர், 'செயல்வீரர்களாக இருக்கின்றனர்' எனும் சிந்தை குளிரும் காட்சியைக் காண்கிறோம். சென்னை மாவட்டக் கழகத்தில், வளர்ந்துள்ள ஜனநாயகப் பண்பும், கொள்கைகளுக்காகப் போராடும் ஆர்வமும், மாவட்டக் கமிட்டிக் கூட்ட நிகழ்ச்சிகளைக் காணும்போது நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். அத்தகைய ஆர்வமிக்க சீயங்கள் நிரம்பிய சென்னை அழைக்கிறது, திராவிடத்தாரை! வரும் ஜூலை 11, 12, தேதிகளில், நேபியர் பார்க்கில், கூடவிருக்கும் சென்னை மாவட்ட தி. மு. க. மாநாடுகளைக் காணவாரீர், எனத் திராவிடத் தோழர்களை அழைக்கிறது!!

முதல்நாள் நடைபெறும் சமூக சீர்திருத்த மாநாட்டினை தென்னாற்காடு மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் ஆர். பாலதருசாமி, துவக்கி வைக்கிறார். தோழியர் பொற்செல்வி இளமுருகு கொடியேற்றி வைக்க இருக்கிறார். இரண்டாவது நாள் மாநாடான அரசியல் மாநாட்டிற்கு, இராமநாதபுர மாவட்டச் செயலாளர் தோழர் சிவ. சண்முகசுந்தரம் தலைமை வகிக்கிறார். நெல்லை மாவட்டச் செயலாளரான தோழர் வீரபாகு துவக்கி வைக்க இருக்கிறார். பழம் பெரும் சுயமரியாதை இயக்க வீரரான தோழர் எஸ். வி. லிங்கம் முதல் நாள் மாநாட்டுக்குத் தலைமை வகிக்கப் போகிறார்!

இருதினங்களிலும் 'வேலைக்காரி' 'பரப்பிரம்மம்' ஆகிய நாடகங்கள் நடைபெறப்போகின்றன.

சீரும் சிறப்புடன், நிகழப்போகும் இம்மாநாடுகளைக் காண, திராவிடக் குடும்பத்தார், விரையக்கோருகிறோம்-சென்னை மாநாடு, ஆச்சாரியாரின் அட்டகாசப் போக்குக்கு. எச்சரிக்கை தரும் மாநாடு. எனவே, அண்மையிலுள்ள எல்லா மாவட்டக்கழக வீரர்களும், ஒன்று கூடவேண்டிய முக்கியமான மாநாடாகும். தலைநகரில் நடைபெறும் இம்மாநாட்டிற்கு, தோழர்காள்! தோழியர்காள்! மாணவர்காள்! கூட்டங் கூட்டமாக, வந்து சேருவீர்—வளர்ந்துவரும் கழகத்தின் மாட்சியினைக் காட்டுவீர்—மாற்றாரின் மன இருளைப்போக்கித் திரண்டுவருவீர் என எதிர்பார்க்கிறோம்; அழைக்கிறோம். வருக! வருக!!

★

# விருதுநகர் மாநாடுகள்

விருதுநகரில் கடந்தவாரம் நடைபெற்ற இராமநாதபுர மாவட்ட தி. மு. க. மாநாட்டின் நிகழ்ச்சிகளை அறிந்தோம்—மகிழ்ந்தோம்.

முதல்நாள் நடைபெற்ற பெண்கள் மாநாடு, திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் தாய்மார்களுக்குள்ள ஆர்வத்தையும், அதன் இலட்சியங்களுக்காகத் தமது குடும்பத்தாரை ஈடுபடுத்த வேண்டுமெனும் ஆவலையும் எடுத்துக் காட்டியுள்ளது.

விருதுநகர் நகரசபையின் துணைத் தலைவராம் தோழியர் ராஜம்மாள் வரவேற்க, தோழியர் செல்வக்கண்ணம்மாள் திறந்துவைக்க, தோழியர் அருண்மொழி தலைமை தாங்கி நடாத்திய அம்மாநாடு பெண்களுக்கென தனியாக நடத்தப்பட்டதென்பதை அறியும் போது, மகிழாதார் இரார்.

மறுநாள் தோழர் சிவ. சண்முகசுந்தரன் வரவேற்புரை அளிக்க. எம் எஸ். சிவசாமி துவக்கி வைக்க தோழர் என். எஸ். இளங்கோ தலைமை தாங்கி நடாத்திய தி. மு. க. அரசியல் மாநாடு, புத்தம் புதுத் தொண்டர்களையும், விடுதலை வேட்கை நிரம்பிய வீரர்களையும் கொண்டு சிறந்து விளங்கியதோடு, பற்பல தீர்மானங்களையும் நிறைவேற்றியிருக்கிறது. நாட்டின் நலிவும், நம[illegible]மையும் குறித்து, மூதாட்டி [illegible] இராமாமிர்த அம்மையார், தோழியர் [illegible] பூங்கோதை, பொற்செல்வி இளமுருகு சத்தியவாணி முத்து, [illegible] இரா. நெடுஞ்செழியன் [illegible] ஆகியோர் முதல் நாளிலும் இரண்டாம் நாள் என். வி. நடராசன், இரா. சு. தங்கப்பழமும், நடிக நண்பர் எம். ஜி. ராமசந்தர், ஈ. வி. கே. சம்பத், பொதுச் செயலாளர் அண்ணாதுரை ஆகியோர் இரண்டாவது நாளிலும் சொற்பொழிவாற்றினர்.

முதல் நாள் எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி முதலியோரும் நடிப்புப் புலவர் கே. ஆர். ஆர். நடிகக் குழுவினரும் நடிக்கும் 'ஜமீன்மாளிகை' எனும் நாடகமும், இரண்டாம் நாள் தோழர் வி. வி. ராமசாமி தலைமையில் நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி கலந்துகொண்ட 'ஓர் இரவு' நாடகமும் நடைபெற்றது.

இரண்டு தினங்களிலும் தோழியர் செல்வா, பெருமாள் தேவன் பட்டி கலை மன்றத்தாரின் 'திராவிடம்' வில்லுப்பாட்டு, முதலிய இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

*

அரசாங்கத்தின் அலட்சியத்துக்கு ஆட்பட்டுக் கிடப்பதும், பஞ்சம் பட்டினி பாசனமின்மை, முதலிய கேடுகளால் இருண்ட வாழ்வுக்குள் நைந்து மெலிவது மான இராமநாதபுரம் மாவட்டத்தில், நமது கொள்கைகளைப் பரப்பும், வீரக் காளைகளையும், வீராங்கனைகளையும் கண்டோம்-விழிகளில் பெருமிதமும் அவர்தம் மொழிகளில் குதுகலமும் பெருகிடக் கண்டோம். இந்த ஆர்வத்துக்கு அணைகோலி, கிளைக் கழகங்களையெல்லாம் பாசறைகளாக்கும், அரும் பணியைச் செவ்வனே செய்துவரும் மாவட்டக் கழகத்தாரை மனமாரப் பாராட்டுகிறோம். மேற்படி மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தி முடித்த வரவேற்புக் குழுவினரையும் செயலாளர்களான தோழியர் பரமேஸ்வரி, தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோரையும், திராவிடநாடு, தன் அன்புள்ளத்தோடு பாராட்டுகிறது. வாழ்க, செயல் வீரர்கள்!

## ஜூலை 8

பொது மக்களிடம் [illegible] 21ல் பிரச்னையை விளக்கினோம். அடுத்ததாக தி. மு. க.வின் ஆதரவுபெற்று வெற்றிபெற்ற எம். எல். ஏ.க்களிடம் நிலைமையைக் கூறிடவேண்டும்.

அந்தத் தூய நோக்கத்துடன் தி. மு. க. ஆதரவு பெற்று வெற்றி பெற்ற எம். எல். ஏ.க்கள் உள்ள ஊர்களில்மட்டும்—பேரூராக இருப்பினும், சிற்றூராக இருப்பினும்—ஊர்வலமாகச் சென்று, அவரைக் கண்டு பேசி, புதிய கல்வித் திட்டக் கண்டன அறிக்கையை அவரிடம் தந்து, சட்டசபையிலே, புதிய திட்டத்தை எதிர்த்துப் பேசி, மக்கள் சார்பாகப் போராடும்படி, கேட்டுக்கொள்ளவேண்டும்.

ஊர்வலத்தில், புதிய கல்வித் திட்டக் கண்டனச்சொற்கள் பொறித்த அட்டைகள்மட்டுமே எடுத்துச் செல்லவேண்டும்—ஒலிகளும் அது பற்றிமட்டுமே இருக்கவேண்டும்.

ஊர்வலத்தில், அமைதிக் குறைவு வரத்தக்க, எந்த நடவடிக்கையும் புக இடமளிக்கக்கூடாது.

ஊர்வலமாக வந்து தங்களிடம் 'அறிக்கை' தரப் போகிறோம் என்று எம். எல். ஏ. அவர்களுக்கு முன்கூட்டியே எழுதிவிடவேண்டும்.

அவர் அன்று ஊரில் இல்லாவிட்டால், அவர் இல்லத்தவரிடம் அறிக்கையைக் கொடுத்துவிட்டு அமைதியாகக் கலைந்துவிடவேண்டும்.

ஊர்வலத்துக்கு, முன்னதாகவே போலீஸ் அனுமதி பெறவேண்டும்.

போலீஸ் அனுமதி மறுத்தால், அமைதியான முறையிலே தடையை மீறவேண்டும். அடித்தால், தாங்கிக்கொள்ளவேண்டும். கைது செய்தால், சிறை புகவேண்டும். பலாத்கார உணர்ச்சிக்குத் துளியும் இடம் தரலாகாது.

ஊர்வலத்தின் அளவு சிறியதாக இருந்தாலும் கவலையில்லை ஊர்வலமாகச் சென்று, எம். எல். ஏ.யிடம் அறிக்கை தருவதுதான் முக்கியமானதாகக் கருதப்படவேண்டும்.

இந்தக் காரியத்தை ஜூலை 8 மாலை, நடத்தித் தரக் கேட்டுக்கொள்கிறேன்,

ஜூலை 8! கவனமிருக்கட்டும்—தி. மு. க. ஆதரவுபெற்ற எம். எல். ஏ.க்களிடம்மட்டும்!!

எந்தெந்த ஊரில், யாரார் தலைமையில் இந்த ஊர்வலம் நடைபெற ஏற்பாடாகிறது என்பதை உடனே எனக்குத் தெரியப்படுத்தக் கோருகிறேன்.

ஜூலை 8! நமது ஆதரவு பெற்று வெற்றிபெற்ற எம். எல். ஏ.க்களைச் சந்திப்போம்.

பர்மிட் கேட்டுச் சென்று பேரம் பேச அல்ல! பிழைக்க வழி கேட்க அல்ல! நமது பின் சந்ததியை வாழவைக்க! நமது இனத்தை இழிநிலையிலே வீழாதிருக்கச் செய்ய!!

ஜூலை 8! ஆச்சாரியாரின் அக்ரமம் நிறைந்த அக்ரகாரத் திட்டத்தைக் கண்டித்து, எம்.எல்.ஏ.க்கள் மூலம் நமது அறிக்கையை, ஆளவந்தார்களுக்கு அனுப்புவோம்.

தீட்டிடும் திட்டத்தைத் திறம்பட நடத்தி, திக்கிக்கும் செய்தியை எனக்களித்து பெருமைதரும் நண்பர்காள்! தோழர்காள்! ஜூலை 8 வெற்றிபெறச் செய்யுங்கள்.

வணக்கம்.

அன்பன்,

**அண்ணாதுரை,**

பொதுச் செயலாளர்,

தி. மு. க.

## திருத்தணி

"நேருவே, நீதி வழங்கு!"—எனும் முழக்கத்துடன், திருத்தணியில், தினசரி அறப்போர் நடந்துவரும் செய்தியினைத் தமிழகம், அறியும். நேர்மையான வேண்டுகோளுக்கு இணங்காத டில்லியைப் பணியவைக்கும் நோக்குடன், மறியலில் துவங்கிய அறப்போர், இதுபோது ரயில்களை நிறுத்துவது என்கிற அளவில் வந்துள்ளது. இதில் ஈடுபடும் தொண்டர்களை, ஆச்சாரியார் அரசாங்கம், தடியால் சாடியது—தினசரியவரைக் கைது செய்து அபராதமும் சிறைவாசமும் அளித்து வருகிறது.

இந்த அறப்போரில் தி. மு. க. தோழர்களும் கலந்துகொண்டு அரசியலார் அளிக்கும் 'பரிசுகளில்' பங்கு பெறுவதாக அறிந்தோம்—மகிழ்ந்தோம்.

நண்பர் ம. பொ. சி யும் இந்த அறப்போரில் பங்குகொண்டு பணிபுரிந்து வருவது குறித்து பெருமகிழ்வெய்துகிறோம்.

நல்லதோர் காரியத்துக்காக அறப்போர் புரியும் தொண்டர்கள் எல்லோரையும் வாழ்த்துகிறோம். அவர்களின் கண்ணியம் நிரம்பிய ஆர்வத்தைக் கண்டு, இன்றைய ஆட்சியாளர், கேலி செய்யலாம்—தடியால் தாக்கலாம்—தண்டிக்கலாம். கடைசியில், அடக்குமுறையை வீசும் ஆட்சியாளர்தான், பணியவேண்டி வரும்—அறப்போர் வீரர்கள் வெற்றிகண்ட பின்னரே, அடங்குவர். இதனை எச்சரிக்க விரும்புகிறோம் டில்லிக்கு. வாழ்க, அறப்போர் வீரர்காள்! வளர்க அவர்தம் ஆர்வம்!!

14-ம் பக்க தொடர்ச்சி

பவழவேற்காடு வந்தோம் இரவு மணி ஒன்பதும் ஆயிற்று.

அனைத்தையும் காத்து இரட்சிக்கும் ஆண்டவனின் திருக்கோயில் சென்றோம். அவனை வணங்கினோம்—எங்கள் உள்ளக் குமுறலோடு.

"ஆண்டவனே நீதானே யாவரையும் படைத்தாய், அதில், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று ஏன் படைத்தாய்? ஏழை பணக்காரன் என ஏன் உண்டாக்கினாய்? எல்லோரும் இன்புற்றிருக்கும் ஏற்ற வழியை, நீ ஏன் செய்யவில்லை" என்றெல்லாம் கேட்டுக் கதறினோம். அவர் கேட்டாரோ இல்லையோ, அதுபற்றி நாங்கள் கவலைப்படவில்லை.

எல்லோரையும் படைத்த ஆண்டவனுக்கு அர்த்தஜாம பூஜையும் ஆயிற்று. அனைவரும் கோயிலை விட்டு வெளியேறிவிட்டனர். நாங்கள் மட்டும் கோயிலினுள் பதுங்கியிருந்தோம்.

நடுச் சாமம். என் தங்கையை—எங்கள் குடும்பத்துக்கு இழிவு உண்டாக்கிவிட்டதாக மற்றவர்கள் கருதிய என் தங்கையை—குளத்தில் தள்ளினேன்—ஆண்டவனின் திருக்குளத்தில் தள்ளிவிட்டேன்—நானும் குதித்தேன், குளத்தில்!

ஜாதி எனப் பேசும் சதிகார சமூகமே!—உனக்குச் சந்தோஷம் தானே!

இப்படிப்பட்ட சண்டாளர்களையும் படைத்து இரட்சிக்கும் ஆண்டவனே!—உனக்கும் மகிழ்ச்சிதானே—எங்கள் இருவரின் முடிவுகண்டு!

★

# சிலை

"ஆகா! அதியற்புதம்—தேஜோ மயானந்தமாக விளங்குகிறது!!"

'என்ன அழகு, என்ன கம்பீரம்! சாட்சாத் எம்பிரானே, எதிரில் வந்திருப்பதுபோலிருக்கிறதே!"

"கண்களில் ஜொலிக்கும் கருணை —கடலைவிடப் பெரிது. ஐயனே, போற்றி! மெய்யனே போற்றி! போற்றி!!"

இவ்விதமெல்லாம், அந்தச் சிலையைப்பற்றி, உலகெங்கும் பேசிக்கொண்டனர். பத்திரிகைகள் யாவும், படம்போடவேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்தால், அந்தச் சிலையின் உருவைப பல கோணங்களில் வெளியிட்டு, பெரும் குறிப்பு எழுதுவார்கள். வயதான பெரியவர்கள், பேரப்பிள்ளைகளை இட்டுச் சென்று, 'தம்பி! கம்பீரமாக இருக்கும் இந்தச் சிலையைப் பார்த்தாயா? இதைப் போல நீயும் வரவேண்டும்!" என்றுரைப்பர். பாட்டுக்கட்டத் தெரிந்தோர், அகவலாகவும் ஆசிரியப்பாவாகவும் வரைந்து தள்ளுவர். ஆடலழகிகள், அந்தச் சிலையைப் பற்றி நடனம் அமைத்து "காம பாணம் பாயுதே, 'கண்ணாளா! கட்டியணைக்க வாரோயோ மணவாளா!" என்று அபிநயம் பிடித்து, சபையோரின் அப்ளாசைப் பெறுவர். கலாரசிகர்கள், அந்தச் சிலையின் விழிகளில் சொட்டும் கருணை, வாளேந்தியிருக்கும் கையின் வலிவு, இடையின் நெளிவு ஆகியவை பற்றிய சாமுத்ரிகாலட்சணங்களைப் பற்றி வர்ணித்துக் குவிப்பர். 'உங்களுக்கு நாங்கள் என்ன மட்டமோ?' என்று எண்ணிய வேறு சிலர், 'சிலையின் மகிமை' எனும் தலைப்பில், வீதிவீதியாகவும், ஊர்கள் பல கடந்தும், காலட்சேபங்கள் நடத்தலாயினர் — 'யாருடைய லட்சபத்துக்காக இந்தக் லட்சபம்?' என்று அறியாதவர்களோ, சிலையைக் கண்டு செல்ல கள் திரளாகக் கிளம்புவர்! காண்பர் களிப்பர்.

"ஆகா! அருள் வடியும்
உன் முகமும்
பொருள் குவிக்கும் உன்
கண்ணும்
மருள் போக்கும்—
இருள் நீக்கும்......"

என்று, பாட ஆரம்பித்தார், ஒரு கான கலாதரர். மிருதங்கமும் சுருதிப் பெட்டியும், அவருக்குத் துணை புரியலாயின. பள்ளிக்குச் சென்று திரும்பும் சின்னஞ்சிறு குழந்தைகள், அந்தச் சிலையைக் காணும் போது, வாய்பிளந்து நிற்பர் — 'வாத்தியார்' சொல்லிக்கொடுத்த, "தேவாதி தேவனே தேவர்க்கதிபனே! மூவுலகும், படைத்துக் காத்து முக்தி அருள்பவனே" என்ற பாடலையும் ஒப்புவிப்பர்.

*

இந்தக்காட்சிகளையெல்லாம், 'ஒருவன்' கண்டுகொண்டிருந்தான். பெரியோர் வந்தால், அவர்களிடம், செல்வான் — ஏதோ ஒன்றைச் சொல்ல வேண்டுமெனும் ஆவலோடு. அவர்களோ, 'போடா, போ!' என்று, அவனை விட்டு விலகுவர். சிலர், அவனை 'பைத்யம்,பைத்யம்' என்று ஏசவும் தவறவில்லை. அவர்கள் பெரியவர்களல்லவா? உருவத்தில்! அதனால், 'அவன்' எதுவும் பேசுவதில்லை. ஆனால், குழந்தைகள் வந்து கும்பிடும்போதுமட்டும், அவன் வாய்திறந்து, கேள்வியொன்றைக் கேட்பான்.

"குழந்தைகாள்! தேவன்—மூவன் என்று செப்புகிறீர்களே — நீங்கள் தேவனையும் மூவனையும் கண்டதுண்டோ?"

குழந்தைகள், கொஞ்சம் மிரளும் —உலகின் கோர சுபாவங்கள் தொடாத பருவமாதலால். மழலை மொழியில் பின்வருமாறு சொல்லும்

"நாங்கள், பார்த்ததில்லை—அப்பா அம்மா சொன்னார்கள்!"

*

அந்தச் சிலை, பார்ப்போர் உள்ளத்தைக் கொள்ளைகொண்டதில், வியப்பில்லை — சாதாரண சிலையா, அது? — அப்பப்பா! உடம்பெல்லாம், தங்கத்தகடுகள்! 'தேஜோமயம் ஜொலிக்கிறது கண்களில்' என்றார்களே, அந்தக் கண்களிரண்டும், விலைமதிப்பற்ற நீல மணிகளால். பொருத்தப்பட்டிருந்தன. ஆதவனின் ஒளிபடும்போது நீல மணிகள் சிந்தும் அழகு. நேத்ரானந்தமாகத் தானே, இருக்கும்? தலையிலோ, வைரங்களிழைத்த மணிமுடி ஒன்று! இருந்த இடமோ, அழகார்ந்தோர், கோபுரம் — எல்லோருடைய கவனமும் கவரக்கூடிய விதத்தில். எல்லோரது கண்களும் சுழன்றதில் வியப்பென்ன இருக்க முடியும்?

*

ஓர் இரவு 'பைத்யம்' ஊரெல்லாம் சுற்றிவிட்டு, ஒண்ட இடம் கிடைக்காது, உணவுக்கும் வழியின்றி, சிலையின் அருகில்வந்து சேர்ந்தான். பசிமயக்கத்தில், ஒருமுறை அந்தச் சிலையை, உற்றுப் பார்த்துவிட்டு, படுத்துக்கொண்டான். ஒரு துளி நீர்!—அவன் முகத்தில் விழுந்தது. துடைத்துக்கொண்டான். மீண்டும் ஒரு துளி நீர்! — விழித்துப் பார்த்தான். 'சே! மழைவேறு வந்துவிட்டதா?' என்று கூறியவண்ணம், நிமிர்ந்து உட்கார்ந்தான். வானத்தில் மேகங்களும் இல்லை! மழையும் இல்லை!! திகைத்தான், ஆச்சரியத்துடன். மீண்டும் ஒரு துளிநீர்! — அண்ணாந்து பார்த்தான். அந்தச் சிலையின் கண்களிலிருந்து, கண்ணீர் வழிந்துகொண்டிருந்தது. சிலையின் கண்களில் கண்ணீர்! — எழுந்து பார்த்தான். அருவிபோல, பாய்ந்து கொண்டிருந்தது. அதோடு, அந்தச் சிலை, வேறு பேச ஆரம்பித்தது.

"தோழனே! நான் யார்?"

"ஐயன்! மெய்யன்! மூவருக்கும் தேவருக்கும் முதல்வன்! கருணைக் கடல்......!"

"தோழனே— இதெல்லாம், மற்றோர் கூறிச் செல்வது. நீ, சொல். நான் யார்?"

"எனக்கென்ன தெரியும் நான் ஓர் பைத்யம்......?"

"உண்மையாக என்னைப்பற்றி அறியாயா?"

"உன்னைப்பற்றி ஒன்றும் அறியேன்—ஆனால், உன்மீது சுமத்தப்பட்டிருக்கும் நவரத்தனங்களையும் தங்கத்தையும் அறிவேன். ஏனெனில், இத்தனை நாட்கள், அவைகளைத்தான் கண்மூடாது பார்த்துக் கொண்டிருந்தேன்."

"நீ பார்த்துக்கொண்டிருந்தாய்—நான் அழுதுகொண்டிருந்தேன்"

"நீ, ஏன், அழவேண்டும்? அழ

கான கோபுரம்! ஆராதிக்கிறார்கள் பலர்! எல்லோரும் போற்றுகிறார்கள்! நீயேன், அழவேண்டும்?''

''இவ்வளவு பெரிய கோபுரத்தில் இருப்பதால்—இந்த நகரமுழுவதும் என் கண்ணுக்குத் தெரிகிறது. அதனால் நான், அழுகிறேன்!''

'நகரத்தைக் கண்டு நீ அழுகிறாயா?''

''ஆமாம்!''

''ஏன்?''

''ஏனா? இங்கே, வா!''

*

சிலை காட்டிய திசையைப் பார்த்தான், 'பைத்யம்' மாடமாளிகைகளையெல்லாம் தாண்டி, சின்னஞ்சிறு குப்பத்தை நோக்கிச் சென்றது பார்வை. அங்கே ஒரு மூலையில் சிறுவன் ஒருவன், 'அம்மா! அம்மா!' என்று அழுதுகொண்டிருந்தான். அவனது தாய், உடலெல்லாம் ஒட்டுப்போட்ட துணிகளால் மூடிய உடம்போடு, எழுந்து சென்று ஒரு தகரக்குவளையில் கொஞ்சம் தண்ணீர் மொண்டு சென்று, பையனிடம் கொடுத்தாள். பையன் அழுதான்! 'சோச்சி அம்மா!' என்று கத்தினான்! தாயோ விழித்தாள். அவள் விழிகளிலிருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது. சிலை கரகரத்த குரலில், பைத்யத்தைப் பார்த்து சொல்லியது.

''தோழா! ஒரு உதவி செய்வாயா?''

''என்ன?''

''இதோ என் மணிமுடியிலிருக்கும் நவரத்னங்களை எடுத்துச் சென்று, அந்த ஏழையின் வீட்டில் வைத்துவிட்டு வருவாயா?''

சிறிது தயங்கினான், 'பைத்யம்.' சிலையே எடுத்துத் தந்தது. புறப்பட்டான். போனான். திரும்பினான்.

*

காலை மலர்ந்தது! இரவு சுற்றியதால் ஏற்பட்ட களைப்பில், தூங்கிக் கிடந்தான், சிலையினருகில். அழகான காரில் சிலர் வந்திறங்கினர்—ஒருவர் இலட்சியக் கவிஞராம்! அவர் சிலையை அப்படியும் இப்படியும் பார்த்தார். கூடவந்தோர், படம் எடுத்தனர். அன்றைய பத்திரிகையொன்றில், கவிஞர் தீட்டிய 'சிலையின்வலை' எனும் அழகான கவிதையைக் கண்டனர், பலர். ஆகா! என்று புகழ்ந்தனர்—ஏனெனில் அவ்வளவு அலங்காரமான வார்த்தைகளைக் குவித்திருந்தார், 'என்ன தீட்டியிருக்கிறார்?' என்று வழியில் சென்ற ஒரிருவரைக் கேட்டான், 'பைத்யம்' அட, எப்படியப்பா, அதனை வர்ணிக்கமுடியும்?' என்றனரே தவிர, விளக்கவில்லை — ஏனெனில் கவிஞரின் கவிதை அவர்களுக்கும் விளங்கவில்லை. கும்பலோடு கோவிந்தா போடும் கூட்டம்தானே!

*

இரவு, சிலையும் அவனும் பேசலாயினர்.

''எந்த ஊர், உனக்கு?''—என்று கேட்டது, சிலை.

''அறிவூர்!'' என்றான், 'பைத்யம்'.

''உன்னைப் 'பைத்யம்' என்கிறார்களே, எல்லாரும்?''

''நான், அறிவூர்க்காரனென்பதால்!''

''இன்னும் நீ, ஒரு உதவி செய்ய வேண்டும்'' என்றது, சிலை. 'இங்கே, வா!' என்றது. எழுந்தான்—பார்த்தான். எங்கோ ஓர், மூலையிலிருந்தது, ஒரு அறை. ஒரே இருட்டுமயம்! அந்த இருட்டறையின் மத்தியில், மேஜையின்மீது சாய்ந்தபடி, ஒரு எழுத்தாளன் படுத்துக்கிடந்தான். காலை விடிவதற்குள், அவன் கதையொன்று தீட்டவேண்டும்! தீட்டினால்தான், இரண்டொருநாள் பொழுதுபோகமுடியும். விளக்கோ அணைந்துகிடந்தது —எண்ணெயில்லாததால்! அவனோ, கவலைதாக்க, சாய்ந்துகிடந்தான்.

'தோழனே!' என்றது, சிலை.

'ஏன்?'

'இந்த நீல மணியில் ஒன்றை எடுத்துக்சென்று ஏழை எழுத்தாளன் வீட்டில்வைத்து வருகிறாயா?,

தயங்கினான் — அறிவூரான். தன் கையாலேயே கண்ணிலிருந்த, நீலமணியொன்றை, எடுத்துத்தந்தது, சிலை. பைத்யம், பறந்தான்!

*

காலை, வந்தது—மேளதாள ஊர்வலத்தோடு, ஒரு பெரிய நபர் வந்தான்—சிலையின், பாதங்களில், சிங்காரமானதோர் பீதாம்பரம் ஒன்றை வைத்தான். கூடவந்தோரும், கூவினர். பைத்யம் விழித்துப்பார்த்தான். எல்லோரும் போனபிறகு, 'யார் இது?' என்று கேட்டான், சிலரை. 'பெரிய லட்சாதிபதி!' என்றனர்—நெசவாலைகளுக்கு அதிபதி என்று விளக்கினர். அவன் செய்திருக்கும் தானதர்மங்களைப்பற்றி புகழ்ந்து புகழ்ந்து, கூறினர்.

*

இரவு, வந்தது. அவனும், சிலையும் பேசலாயினர். சிலை, இன்றும், ஒரு காட்சியைக் காண்பித்தது! எங்கோ ஓரிடத்தில் — சாக்கடையின் அருகில் நின்றபடி ஒரு இளம் பெண் அழுதுகொண்டிருந்தாள் — அவள் கையில், ஒரு நெசவுச் சேலை, புதியதாக, இருந்தது. சேலை முழுமையும் சேறு! சிலை, கேட்டது: ''விளங்குகிறதா, விஷயம்?''

''என்ன?''

''அந்தச் சிறுமி, ஒரு கைத்தறி நெசவாளரின் மகள். காலையில், அவள் தந்தை ஒரு சேலையைக் கொடுத்து, விற்பனை செய்துவரச் சொன்னான். ஊர் முழுதும் அலைந்தாள்! ஒருவரும் வாங்கவில்லை! வீட்டிற்கு, வெறுங்கையுடன் சென்றால், தந்தை அடிப்பான். ஆகவே, தயங்கி நின்றாள். நடுரோட்டில நிற்கும் அந்த ஏழைப் பெண், போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதாகப் புகார் செய்தனர், காரில் செல்வோர். போலீஸ்காரர் வந்தார். மிரட்டினார்! அழுதாள் அவள்!! விரட்டினார்! பயந்து ஓடினாள்!! அப்போது, அவள் கையிலிருந்த சேலை, பக்கதிலிருக்கும் சாக்கடையில் வீழ்ந்துவிட்டது. என்ன செய்வாள்? பணமும் கிடைக்கவில்லை! சேலையும் சேறாகிவிட்டது!!''

''ஐயோ, பாபம்!''

''தோழா! இன்றும், எனக்கோர் உதவி செய்வாயா?''

---

## திருமணம்

சலகண்டாபுரம் 'பகுத்தறிவு' ஆசிரியர் திரு. ப. கண்ணன் அவர்களின் புதல்வி ப. க. குஞ்சிதத்திற்கும், திரு. கோ. அ. ரு. முருகையனார் புதல்வர் மு. வடிவேல் L A E க்கும், 25—6—53 காலையில் திருத்திய திருமணம் நடைபெற்றது.

"என்ன?"

"இந்தக் கண்ணிலிருக்கும் மற்றோர், நீலமணியையும் எடுத்துச் சென்று, அவளிடம் தந்துவருவாயா?"

அவன் தயங்கினான்—சிலை, எடுத்துத்தந்தது.

சிலையை, நிமிர்ந்து பார்த்தான்.

"ஐயோ, குருடாகிவிட்டாயே!"

"இனி, இந்தக் கோரக் காட்சிகள், என் கண்களில் தென்படாதல்லவா?"—என்று அமைதியோடு, பதில், தந்தது. நீல மணியுடன், சென்றான், பைத்யம்.

*

காலை, மலர்ந்தது. சிலையின் வேண்டுகோளின்படி, ஊரின் நாலு பக்கங்களையும் சுற்றிவரச்சென்றான், பைத்யம், உயர்ந்த மாடமாளிகைகள்! நகைக் கடைகள்! உல்லாச விடுதிகள்! கார் பவனி! காரிகைகளின் உல்லாசம்! இவைகளை மட்டுமல்ல, 'ஐயா, பிச்சை!' என்று அலையும் கும்பல், சின்னஞ்சிறு குடிசைகளில் சீரழிந்து கிடப்போர். ஓடாத தறிகள், வேலை இல்லாத தொழிலாளர்கள், எல்லோரையும் கண்டான். ஓடிவந்தான், சிலையிடம். இரவு, வந்தது.

"தோழனே! இன்று என்னென்ன, கண்டாய்?"

எல்லாவற்றையும், விளக்கினான்; பைத்யம்.

"என் மனம் வெடித்துவிட்டது" என்றான்.

தோழா! என் மீது இருப்பது, என்ன?"

"தங்கம்!"

"இதையெல்லாம் சுறண்டிச் சென்று, அவதிப்படுவோருக்கெல்லாம் அளித்துவிடு!"

பைத்யம், இம்முறை, தயங்கவில்லை—தங்கத்தையெல்லாம் சுறண்டினான். ஒவ்வொரு குடிசைக்குள்ளும் சென்றுவந்தான். குதூகலம், பொங்கிற்று—குடிசைகளில்! ஆனந்தம் முகிழ்த்தது!!

*

இரவு, வந்தது. சுற்றியலைந்த வேதனை தாங்காத, அறிவூரான், தள்ளாடியவண்ணம் சிலையைப்பார்த்தான்—சிந்தை நொந்தான்.

"எவ்வளவு அழகாயிருந்தாய்? இப்படிப்போய்விட்டாயே!"

"அழகல்ல தோழனே, முக்கியம்! அன்பு!! என் உடல் வெளியே தெரிகிறது. என் உள்ளம் எவ்வளவு ஆனந்தப்படுகிறது, தெரியுமா?" என்றது, சிலை. பைத்யம், ஏதும் பேசவில்லை! பேசமுடியாத அளவு. வேதனை!! சுருண்டு வீழ்ந்தான். சிலை, குனிந்தது. அவனைத் தொட்டுப்பார்த்தது.

"தோழா!"

விழித்துப்பார்த்தான்.

"என்னை ஒரு முறை, கட்டித் தழுவிக்கொள்—இன்னும் சிறிது நேரத்தில் சாகப்போகிறேன்"

பைத்யம், எழுந்தான். மர உடம்புடன், கண்ணற்று, காட்சியளித்த சிலையைக் கட்டித் தழுவினான்—தள்ளாடியவாறு. சிறு காற்று, வீசிற்று! சிலையும் அவனுமாக, கோபுரத்திலிருந்து, வீழ்ந்தனர்!!

*

காலை மலர்ந்தது—முன்னே பரிவாரங்கள் செல்ல, பின்னே 'ஜே! ஜே!!' கோஷம் போட, பெரிய மந்திரி, ஊர்வலம் வந்துகொண்டிருந்தார். சிலை நின்ற இடத்தைப்பார்த்தார். வீழ்ந்துகிடந்த சிலை தென்பட்டது — அதனுடன் செத்துக் கிடந்த பைத்யமும் தென்பட்டான்.

"செச்சே! எவ்வளவு மோசமாகப் போய்விட்டது, இந்த விக்ரஹம்!!"

"ஆமாம், மோசமாகப் போய்விட்டது!!" என்றனர், பெரிய மந்திரி எது சொன்னாலும், 'ஆமாம்' போடும், ஆசாமிகள்.

"முடியில்லை! நீலமணிக்கண்களில்லை!! — தங்கமில்லை!! வெறும் மரக்கட்டை!!!"

"ஆமாம்! வெறும், மரக்கட்டை!"

"ஒருவன் செத்துக்கிடக்கிறான்—பைத்யம்!!"

"ஆமாம்! பைத்யம்!!"

"இது, எவ்வளவு அழகான இடம். இங்கே, அனாதைப்பிணமா, கிடப்பது. செச்சே! எவ்வளவு அநாகரீகம்!!"

"செச்சே! எவ்வளவு அநாகரீகம்!!"

சுடுகாட்டில் பைத்யம் எரிந்துகொண்டிருந்தான்! அவனை எரிப்பதற்கு அந்த 'மரக்கட்டை"யையே உபயோகித்தனர். மரக்கட்டையும், ஜுவாலை எழுப்பி, தகதகவென எரிந்தது! பைத்யத்தின் உடல் வெந்து சாம்பலாகிகொண்டிருந்தது!!

நேற்றுவரை போற்றித் துதி செய்த எவரும், அங்கேயில்லை. தங்கம்—வைரமுடி—பிதாம்பரம்—கோபுர வாழ்வு—இருந்த வரையில். அந்தச் சிலை, விக்ரகமாக இருந்தது! இன்றோ, அது மரக்கட்டை!!

அந்த விக்ரகத்தைப் பார்த்து, 'வணங்கியும்', 'வாழ்த்துப்பா கூறியும் சென்ற, பெரிய மந்திரியார், தனது மந்திரி சகாக்களைக் கூட்டி, மற்றோர் விக்ரகம் செய்வதைப் பற்றி, அப்போது, யோசித்துக் கொண்டிருந்தார் — புது விக்ரகத்துக்கு எத்தனை எடை தங்கம் தேவை, வைரமுடிபோட எவ்வளவு இலட்ச ரூபாய் திரட்டவேண்டும் என்பதைப்பற்றி.

பழைய 'விக்ரகமோ' தன் எண்ணத்தை நிறைவேற்றியவனும், பிறரால் 'பைத்யம்' என்று தூற்றப் பட்டவனுமான மனிதனுடன் கருகிக்கொண்டிருந்தது!!

*

## பட்டினிப் பட்டியல்!

'பாரத பூமி' முழுமையும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டிருப்போரின் புள்ளி விவரத்தை, டில்லி விவசாய மந்திரியார், அண்மையில் தெரிவித்திருக்கிறார். மாகாண வாரியாக வந்துள்ள அந்தப் புள்ளி விவரங்கள்:—

| | |
|---|---|
| மத்யப் பிரதேசம் | — 5·7 லட்சம் |
| பம்பாய் | —47·5 லட்சம் |
| பஞ்சாப் | — 1·5 லட்சம் |
| ஐதராபாத் | — 9.7 லட்சம் |
| மத்யபாரதம் | — 7.8 லட்சம் |
| மைசூர் | —43.5 லட்சம் |
| ராஜஸ்தான் | —22.6 லட்சம் |
| சௌராஷ்டிரா | — 3.0 லட்சம் |
| விந்தியப்பிரதேசம் | — 8.6 லட்சம் |
| சென்னை | —98.3 லட்சம் |

சென்னை, முதலிடம் பெறுகிறது, பட்டினிப்பட்டியலில்! — ஆனால், இந்தச் சென்னைக்கு, டில்லியார், உதவியளிப்பதாக வாக்களித்திருப்பது 2 கோடி ரூபாய். சென்னை சர்க்கார் தேவையென்று கேட்டதோ, 10 கோடி ரூபாய்! — இந்தியா முழுமையிலும், பட்டினிப்பட்டாளம் குவிந்திருப்பது, நம் பூமியில்தான்!! கூறுவது, நாமல்ல; சர்க்காரின் பட்டியல்!

திராவிடநாடு

காஞ்சி] 5—7—53 [ஞாயிறு

# உங்கள் "நாடு"

நீண்டதோர் பெருமூச்சை விட்டுக்கொண்டு, 11-ஆம் ஆண்டை முடித்துக்கொண்டுவிட்டது உங்கள் ஏடு.

நம்பிக்கை உதயத்தோடு, புது ஆண்டில், அடியெடுத்து வைக்கிறது. பூரிப்புடன்தானே?—என்று கேட்பீர்கள். அல்ல! அல்ல!! அதே பெருமூச்சுடன்தான்.

வியாபாரத்தைக் குறியாகக் கொள்ளாமல், இலட்சியங்களைத் தாங்கிவரும் ஏடுகள்—புன்சிரிப்புகளோடு உலவ முடியாது; பெருமூச்சோடுதான், தவழும் — தவிக்கும். இந்தப் பொது விதியின், அளவையும் தன்மையையும், உங்கள் ஏடு, தன் சக்திக்கு மீறிய வகையில், உணர்ந்திருக்கிறது.

எனினும், உள்ளத்தில் ஒரு புதுத் தென்போடு, உங்களை நோக்கிப் பவனி வருகிறது.

மிட்டா மிராசுகளின் கூட்டுப் பணமோ, சர்க்கார் அள்ளித்தரும் உதவித் தொகையோ, அமெரிக்கா வழங்கும் 'அன்புக் காணிக்கையோ' வியாபாரக் கோமான்கள் வழங்கும் விளம்பரத் தொகையோ அல்ல—'திராவிடநாடு' பெறுவது. உங்களின் அன்பு! ஆதரவு!! அவையனைத்தையும்விட, நீங்களே அதன் செல்வம். உங்களுக்காக உழைப்பது! உங்களைக் காணத் துடிப்பது! ஏன்?—உங்களுடையதும்கூட!!

மூட்டை மூட்டையாக 'பாங்கி'யில் போடப்பட்ட மூலதனமல்ல, உங்கள் 'நாட்டின்' செல்வம் — நீங்கள் தரும் அன்பும், ஆதரவும்தான்!!

இவைகளை எதிர்பார்த்துத்தான், இந்தப் பாதையில், நுழைந்தது—பெருமூச்சு, அதற்கு, மிக மிகப் பழக்கம். ஆனால், மூச்சே நின்றுவிடக்கூடாதல்லவா? இந்தக் கஷ்டம், கடந்த ஆண்டில், 'நாட்டை'த் தாக்கியது. காரணம், வாசக நண்பர்களாகிய நீங்களல்ல! "நாட்டி"ன் மீது, அதிக உரிமையும் பாசமும் கொண்ட நமது ஏஜண்டுத் தோழர்கள்தான்!! அவர்களுமென்ன, 'பில்' போனதும் 'செக்' அனுப்பும் சீமான்களா! இல்லை—இல்லை. நம்மைப்போன்றோர் தான் — நம்மிலே ஒருவர்தான். எனினும், அலட்சியமோ, ஒப்பின்மையோ அறியோம் — அடிக்கடி நமக்கு 'பெருமூச்சு' ஏற்படச் செய்துவிட்டார்கள்.

சுமார் இருநூற்றுக்கு மேற்பட்ட ஏஜண்டுத் தோழர்கள்—இவர்களில் இருபது பேர் சுணங்கினாலும் போதுமே—தெப்பம் தள்ளாட வேண்டியதுதானே? இந்த இக்கட்டை, இந்த ஆண்டு, நமது நண்பர்கள் உண்டாக்காமலிருப்பார்களென்ற உறுதியோடு, 12-ம் ஆண்டில், அடியெடுத்து வைக்கிறது.

சந்தாதாரர்கள், 'நாட்டை'ப் பொறுத்தவரையில் வர வர, அதிகமாகிக்கொண்டிருக்கிறார்கள். குக்கிராமங்களிலிருந்தும்—கடல் கடந்த பிரதேசங்களிலிருந்தும் — அவர்கள் காட்டும் ஆதரவும் அன்பும், குறிப்பிடக்கூடியவை. ஆனால், அவர்களையும்நமது அலுவலகத்தையும், அடிக்கடி அல்லலில் ஆழ்த்தத்தவறவில்லை, 'அஞ்சல்' இலாகா. அலுவலகத்திலிருந்து இதழ்போகும் — ஆனால், இரண்டொரு நாளில், 'இதழ் ஏன் வரவில்லை?' என்று கடிதம், கோபத்தோடு வரும். நிர்வாகி மிரள்வார்! இந்தக் 'கதை' தொடர்ந்ததற்குக் காரணம், ஏட்டினைக்காணும் ஆவல், நடுவிலிருக்கும் பலருக்கு அதிகரித்ததும், 'திராவிடநாடு' எல்லோருக்கும் பொதுதானே, என்கிற நல்ல சுபாவம் அதிகமானதும்தான். ஆகவே, அத்தகைய, 'இடைவெளி'கள் ஏற்படாமல், ஒத்துழைக்குமாறு, சம்பந்தப்பட்ட எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

*

பெருமூச்சுமட்டும்தான் என்று எண்ணாதீர்கள். அன்புக் கோபம்—பரிதாபம் — வேண்டுகோள் — உரிமைப்பாசம்—இதுபோலப் பலப்பல, நேர்ந்ததுண்டு, கடந்த ஆண்டில்.

"நான் எழுதியனுப்பிய எங்கள் ஊர்ச் செய்தியை ஏன் போடவில்லை?"—அன்போடு கோபித்துத் திட்டுவார், ஒரு தோழர். அவர்மீது குற்றமில்லை—தி. மு. க. வின் தின இதழ் செய்யவேண்டிய பெரும் பணியையும் உங்கள் 'நாடு'தானே தாங்கவேண்டியிருந்தது—ஆகவே, கேட்பார்.

நிர்வாகியைப் பார்ப்பேன். "இன்னும் இரண்டு பக்கம் அதிகமாக்கலாமா?" என்பேன். அடிகள், பேசமாட்டார். பரிதாபத்தோடு, பார்ப்பார். அந்தப் பார்வை 'ஐயோ! பேப்பர்விலை என்ன தெரியுமா?' என்று கூறாமல் கூறும். ஏடு, என்ன செய்யும்! உங்களை நோக்கி, வாரம் தோறும், வரவேண்டுமே!! 'ஒரு நாள் ராஜா' கதையாகிவிடக்கூடாதே?

இந்த நிலையில், கணக்குப் புத்தகம், கவலையைத்தரும் — நிர்வாகி ஓடிவருவார்—'ஒரு வேண்டுகோள்' என்பார். ஏட்டில், வரும்.

'ஏஜண்டுத் தோழர்களே!
கடமையைச் செய்யுங்கள்—காலந் தாழ்த்தாதீர்கள்'—என்று.

பல நாள், வரும் — போகும். கணக்கேடு, அப்படியே இருக்கும். கலங்கும் நிர்வாகி, என்ன செய்வதென்று புரியாது, 'எல்லோரும் கையாளும்' வழியைக் கடைப்பிடிப்பார். இரண்டொரு தினங்களில், "எவ்வளவு காலமாக, நான் ஏஜண்டு? எதற்காகப் பத்திரிகையை நிறுத்தினீர்கள்!" என்று உரிமை கலந்த பாசத்தோடு, அன்புக்கணையொன்று வரும். அந்தக் கணையை அவர்கள் பூட்டவும், அதைத் தாங்கிக்கொள்ளவுமான, நிலைதானே, நாட்டுக்கும், மக்களுக்கும். ஏஜண்டுகளை, வியாபாரத் தூதர்கள், என 'நாடு' கருதுவதில்லை! தங்களைப்போல, நிலைமையை உணர்ந்தவர்கள், என்று சமமாகப் பாவித்து வருகிறது!! அந்த உரிமைக் கணையைப் பூட்டச்சொல்லும், அவர்களை, நாடு மிதக்கும் தெப்பமாகிக் கொண்டிருப்பதும் தண்ணீர் வற்றினால் தரையில் நிற்கவேண்டிய கதி நேரும் என்பதும், அறியாதவர்களல்ல, அவர்கள் — ஏதோ ஒரு அலட்சியம்! 'இதுதானா, ஒரு பெரிய தொகை!' எனும் கருத்து!!

*

இந்தக் 'கதை', கடந்த ஆண்டோடு, போய்விடவேண்டுமென விரும்புகிறோம். இனி, பெருமூச்சு, எழும்ப நேர்ந்தால், அதோடு,

'ஆட்டம்' சரிதான்! அந்தக்கட்டத்தை உண்டாக்காத பொறுப்பு—வாசகர்களுடையது என்று கூற மாட்டோம் — ஏஜண்டுகளின் கையில்தான். இதனை, அன்போடு, அவர்களுக்கு அறிவித்துக்கொள்ளுகிறோம்.

கடந்த ஆண்டு முழுமையும், நமது ஏடு, பெரும்பாலும் 'கழகக் குரலை' ஒலிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. இப்போது, 'நம் நாடு' அக்குறையைப் போக்குவதால், 'திராவிட நாடு' வழக்கம்போல, கருத்துக்களைத் தாங்கியே வரும்—16-பக்கங்களோடு.

வனப்பும், வசீகரமும் ஏந்தி உங்கள் கைகளில் பரிமளிக்க வேண்டுமென்கிற ஆசை, 'நாட்டு'க்கும் உண்டு — வாய்ப்பும், வசதியும் கிடைத்தால், நிச்சயம் அந்த ஆசை நிறைவேறும்.

ஆயினும், தன்னாலியன்ற அளவு, நாட்டின் நலிவு நீங்கவும், கெடுமதியாளர் பித்தலாட்டம் ஒடுங்கவும், மறுமலர்ச்சி மணம் கமழவும், வழக்கம்போலப் பாடுபடும். அதற்கான ஆதரவை, 'நாடு', தேடவேண்டியதில்லை. நீங்கள், இருக்கிறீர்கள்! உங்களிலே பலரை, 'அறிமுகம்' செய்து கொள்ள 'நாடு' ஆவல் கொண்டதுண்டு—சந்தர்ப்பம் நேர்ந்தபோது உங்கள் எழுத்துக்களையும் தாங்கி, வெளிவந்ததுண்டு. இந்த வாய்ப்பினை, எழுத்தாற்றலில், ஆசை கொண்டுள்ள உங்களில், பலர் பயன்படுத்திக் கொள்ளவில்லை எனும் குறை, 'நாட்டுக்கு' உண்டு. அதனைப் போக்கிடவாரீர், என்று, புது எழுத்தாளர்களை அழைக்கிறோம்! எழுத்துக்களைமுடையாமல் கருத்துக்களைத் தரும் — கட்டுரைகள், நிச்சயம், இடம்பெறும். நிறைவேற்றுவீர், இந்த ஆசையை.

•

12-ம் ஆண்டு. அப்பப்பா! ஒரு முறை திரும்பிப்பார்த்தால், தாண்டி வந்துள்ள வெடிப்புப் பள்ளங்கள், எரிமலைகள், ஈட்டிக்குத்துதல்கள் எல்லாம் தெரிகின்றன. அவைகளையெல்லாம் தாங்கி; உரமும் வலிவும் பெறச்செய்த, உங்கள் புன்சிரிப்பும் தென்படுகின்றன. தொல்லைகளைப் பெருமூச்சால், கழுவிக்கொண்டு வந்திருக்கிறோம். அந்தப் பெருமூச்சு, ஓய்ந்து, புன்சிரிப்பும் புன்னகையும் பூக்க வேண்டும் உங்கள் 'நாட்டு'க்கு! அதற்குள்ள பொக்கிஷம், ரூபாய் அணாக்களல்ல —நீங்கள்தான்!!

உங்களின் அன்பைத் தழுவிக் கொண்டு, 'நாடு' நடைபோடுகிறது—தன் நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தபடி. வணக்கம்.

★

## 'முன்னாள் அமைச்சர்' மறைந்தார்

"மரணம், மனிதனை இட்டுச் சென்றுவிடலாம்; அவன் செய்த செயல்களை இட்டுச்செல்ல முடியாது."

*

முன்னாள் அமைச்சர் என்று பெருமையுடன் நம்மால் அழைக்கப்பட்டு வந்த மூதறிஞர் முத்தையா அவர்கள், தமது 73-வது வயதில், இயற்கையெய்தினார் எனும் செய்தியைக் கேள்வியுற்றதும், திகைத்தோம்.

சகடக்காலைப்போல வரும், பிறப்பும் இறப்பும், சகஜம்தான். ஆனால், சிலருடைய மறைவு 'சகஜமான'தொன்றாகக் கருதப்படாமல், பலருடைய உள்ளங்களை கண்ணீரால் கழுவுகிறது என்றால் மறைந்தவர்கள், மறையாதவாறு, செய்துவைத்துச் சென்ற, செயல்களேயாகும். மூதறிஞர் முத்தையா அவர்கள், தமது புன்சிரிப்போடும், புத்திக் கூர்மையோடும், நம்மோடு உரையாடிய நாட்கள் ஏராளம். அதை நினைக்கும்போது, அவரோடு பழகும் வாய்ப்புப் பெற்ற, நமக்கு அவரது புன்சிரிப்பும்—புத்திக் கூர்மையும், கவனத்தைத் தாக்குவதும், கண்ணீரை வரவழைப்பதும் சகஜமே.

ஆனால், நண்பர்கள் ஒரு சிலர் மட்டுமல்ல, மூதறிஞரின் மறைவு கேட்டு கண்ணீர் வடிப்பது! நாட்டிலே வதியும் வாலிபர்கள் — தாய்மார்கள் — மாணவர்கள், இவ்வண்ணம், பலர் பதைக்கிறார்கள், அவர் சாவு கேட்டு. அவர், இறந்தார்! ஆனால், அவரையறிந்தோர் மட்டுமல்ல, அவரோடு உறவாடியோர் மட்டுமல்ல, அவரைக் கண்டிராதோரும், அவரது செயலைமட்டும் அறிந்தோரும்—அவரது பேச்சைக் கேட்டறியாதோரும்—எழுத்துக்களை மட்டும் படித்தோரும் இவ்வண்ணமிருக்கும் மக்கள் கூட்டத்திலே, பெரும்பாலோர், திடுக்கிடுகின்றனர்—திகைக்கின்றனர்.

அந்தளவுக்கு, மக்களின் கண்ணியையும் கருத்தையும் கவர்ந்த தலைவர்கள், ஜஸ்டிஸ் கட்சியில் விரல் விட்டு எண்ணத்தக்க அளவிலே இருந்ததால்தான், அது, விரைவில் வீழ்ந்தது — புதுமலர்ச்சி பெற வேண்டியதாயிற்று. கனதனவான்களின் கைலாகுகளோடு, அமைச்சர் பதவிதந்த ஆனந்தத்தோடு, மூதறிஞர் முத்தையா அவர்கள் இருந்துவிடவில்லை கிடைத்த சந்தர்ப்பத்தை, 'கித்தாப்புக்கும்' 'திறப்புவிழாக்களுக்கும்' மட்டுமே வாய்த்ததெனக் கருதிடாமல், திராவிட இன மக்களின் துயர் நீக்கும் திட்டங்களுக்காகப் பயன்படுத்தினார். 'கோயில் பூஜைகளின்' கொட்டம் அடக்கும் நடவடிக்கையாக, இந்து அறநிலையச் சட்டம் உருவாகவும்; 'ஒருசாதிக்கொருநீதி' ஒழிக்கப்படவேண்டுமென்னும், வகுப்புரிமைச் சட்டம் ஏற்படவும், தான் மந்திரியான காலத்தில் பாடுபட்டார்— எதிர்ப்புகளுக்கிடையே, நிறைவேற்றினார். அதனால்தான், 1928-ல் அவர் அமைச்சராயிருந்தாரென்றாலும் நாளது தேதிவரை 'முன்னாள் அமைச்சர்' எனும், அடைமொழி அவர் பெயரோடு, ஒட்டிக்கொண்டிருந்தது. நேற்று அமைச்சராயிருந்துவிட்டு இன்று வெளியேறியதும், மறுநாள் 'அவர் மந்திரியாகவா இருந்தார்!' என்று மக்கள் சந்தேகப்பட்டுக் கேட்குமளவுக்கு, அமைச்சர்களிருக்கும் இந்த நாட்களிலே, மூதறிஞர் அவர்களை, 'முன்னாள் அமைச்சர் என்று பெருமிதத்தோடு அழைத்துப்போற்றிய திராவிடம், அவர் மறைந்தாரெனும் சொல்கேட்டு திகைப்பதிலும் தேம்புவதிலும் வியப்பிருக்க முடியாது!

தஞ்சை மாவட்டத்தின் எல்லைக் கோடாம் சீர்காழிக்கு அருகிலுள்ள குரும்பக்குடியில் பிறந்தவர் அவர். பட்டப்படிப்பும் சட்டக் கல்வியும் கற்று, வக்கீலாகியதோடு, தன் வாழ்க்கைக்கு 'வரம்பு' அமைத்துக் கொண்டிருக்கவில்லை—நீதி மன்றங்

களுக்கு வரும் வழக்குகளுக்கு மட்டும், 'வக்கீலாக' இருக்கவில்லை—நீதிமன்றத்துக்கு வரமுடியாது, அநீதிப் போர்வையால் மூடப்பட்டிருக்கும் கோடிக்கணக்கான மக்களின் குறைகளை எடுத்து வாதிக்கும், பொது மன்ற வக்கீலானார்! 'தஞ்சை மாவட்ட மிராசுதார்' எனகிற 'ஜரிகை'த் துப்பட்டாவுடன், மிடுக்குக் குரலும், துடிப்புப் பேச்சும், கொண்டு 'அதுவே, பிறவியின் பெருமை!' என்றிருக்கவில்லை, அவர். வாழமுடியாமல் தவிக்கும் தன் இன மக்களைச் சூழ்ந்துகிடக்கும் இருளைப் போக்கிடும் நற்பணியில் இறங்கினார். வீடுண்டு! வாசலுண்டு! மனைவியுண்டு! மக்களுண்டு! நிலமுண்டு! நீட்டிய விரலில் பாய ஆளுண்டு! வண்டி உண்டு! வசதி உண்டு! என்று, 'தம்'மைமட்டும் கவனித்துக்கொண்டு, உடம்பையும் வயதையும் பெருக்கிச் செல்லும், பலரைப்போலில்லாமல், மக்களைப் பார்த்தார்! அவர்களுக்காகப் பாடுபட்டார்! அதனால்தான், இன்று மக்களும், அவரைப்பார்க்கின்றனர், 'இல்லை'—என்ற சொல்கேட்டதும் திகைக்கின்றனர்—தேம்புகின்றனர்!

மக்கள் மனதிலே, நிலைத்துவிட்ட, அந்தப் பெரியாரின் மறைவு—திராவிடத்துக்கு ஏற்படும், குறிப்பிடத்தக்க நஷ்டங்களிலே ஒன்றாகும். திராவிடன்—திராவிடநாடு—என்கிற பிரச்னைகளிலே, அப்பெரியார் கொண்டிருந்த ஆர்வமும், அதுகுறித்து பல முறை அவர் ஆற்றிய வீராவேசமான சொற்பொழிவுகளும், நம் கண்முன்னே காட்சியளிக்கின்றன. நல்லவர், அவர்! நல்லெண்ணத்துக்காகப் பாடுபட்டவர், அவர்!—அத்தகைய ஒருவரை, நாம், இழந்துவிட்டோம்.

பொது வாழ்க்கையின்பால், அப்பெரியார் காட்டிய ஆர்வமும்—அதற்காக அவர் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிகளும்—என்றும் மறக்கமுடியாது.

மூதறிஞர் முத்தையா, காலமாகி விட்டார்—ஆனால், அவர் தொண்டு, காலம் மாறினாலும் கவனத்தை விட்டு மறையாது.

அத்தகைய சேவையின் மூலம், மக்கள் மனதில் நிலைத்த, 'முன்னாள் அமைச்சர்' மறைவு குறித்துக்கலங்கும் அவரது குடும்பத்தாருக்கும், மூத்தமகனார் நண்பர் சொக்கலிங்கத்துக்கும் நம்முடைய அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்

மக்கள் மனதில் நிலைக்கும் எண்ணற்ற இலட்சியவாதிகளை இனியும் நீ, உண்டாக்கித்தர முனைவாய்—கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பிறர் கண்ணீரைப்போக்கும்பெரும் பணிக்கு 'நினைவில் நிலைக்கும்' பெரியார்களை உண்டாக்கித் தருவாயாக! என்று திகைக்கும் திராவிடத்தை, கேட்டுக்கொள்ளுகிறோம்.

முன்னாள் அமைச்சர் மறைந்தார்! அவரது 'தொண்டு' நம் கண்முன் நிற்கிறது!!

வாழ்க, அவர் தொண்டு! வளர்க நல்லெண்ணம்!!

★

## ஆயிரம், தாரீர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இதழாம், 'நம் நாடு', நாட்டோரின் கைகளிலே தவழும்காட்சியைக் கண்டு மகிழ்ந்த தோழர்கள், உற்சாகமான கடிதங்களைத் தீட்டுகிறார்கள்.

'சின்ன இதழா?'—என்று, அதிருப்தியோடு, கேட்டவர்கள் எல்லாம், ஆர்வத்தோடு, காண்கிறார்கள்,

இருளிலே, கிடந்த நமது கழகத்துக்குக்கிடைத்த, ஏடு, நம் நாடு!—அந்த 'ஏடு' எல்லோரின் கருத்தையும் கவனத்தையும் பெறுவது காண மகிழ்கிறோம்.

நமது உண்மை உழைப்பும், இலட்சிய ஆர்வமுமே, 'நம் குழந்தை'யை வளர்க்கும், உணவாகும்.

இதழைக்காணத் துடித்த தோழர்காள்! 'நம் நாடு', இன்னும் சிறப்பான முறையில், வரவேண்டாமா? 'ஆம்' என்பீர்கள். அப்படியானால், எங்கே, உமது ஆர்வச் சொற்களெல்லாம்! 'எத்தனை சந்தா, தேவை?', என்று பொதுக்குழுவில் உரையாடியபோது உரைத்த தோழர்காள்! உமது, 'ஆர்வம்', பயன்பட வேண்டிய கட்டம்—ஆண்டுச சந்தாக்கள் சேர்த்து அனுப்புவீர்—'நம் நாடு' இதழுக்கு. கிளைக்கழகம் ஒவ்வொன்றும் ஒவ்வோராண்டு சந்தாவை அனுப்பலாமே!—'எங்ஙனம்?'—என்று கேட்காத பாசறைகளன்றோ, நம் கழகங்கள்! நன்கொடை மூலமோ, எவ்வகையிலோ, ஆண்டு சந்தா ரூ. 24-ஐ திரட்டுங்கள்—உடனே, அனுப்புங்கள்—'நம் நாடு', அறிவகம், ராயபுரம், சென்னை—முகவரிக்கு.

குழந்தை தவழ்கிறது! குறுஞ்சிரிபபுக் கண்டு குதூகலித்து விட்டால் போதுமா? வளர, வகையான, போஷணை தருவது யார்! மாற்றார், வருவர்—சேச்சே! அவர்கள் நம் குழந்தையின் கொவ்வைச் சிரிப்பு கண்டு, கொதித்தன்றோ, கிடக்கிறார்கள்—குரல்வளைக்கன்றோ, குறி வைக்க எண்ணுகிறார்கள். ஆகவே, 'நாம்' தான் நம் நாட்டின் செல்வம்! இயன்றளவு முயன்று, சந்தாக்களைச் சேர்த்து அனுப்புங்கள்!! குறைந்த பட்சம், ஒரு ஆயிரம்—சிறுதுளிகளைக் கோருகிறது, உங்களிடமிருந்து—பெருவெள்ளமாகக் குவியட்டும், 'நம் நாடு'க்கு!!

## ஏழையின் குரல்

பள்ளிக்கூடம் போகும் எங்கள் பாலர்கூட,
புல்லு வெட்டி மெலிந் துருகி நோயில் வாடிட,
வெள்ளை உள்ளத்தோடு நாங்கள் கள்ளமில்லாமல்—மாடுபோல
வேலை செய்தும் நியாயம் கேட்க உரிமை இல்லையா?

படிப்பறியோம் எழுத்தறியோம் பாழும் வாழ்விலே
பலிஷாக உடுத்தறியோம் வாழ்நாளிலே,
இன்பமில்லை, துன்பமே எங்கள் வாழ்விலே,
எங்கள் குறையைக் கேட்க இனி யாருமில்லையா?

[ உலோக உலகம் ]

# ஒரு புதுப் பொருள்

பூமி மாதாவின் மடியில், மனிதன் எத்தனையோ பொருள்களைக் காண்கிறான். அறிவுத் திறன் கொண்டு அவைகளை ஆராயும் மனிதன், புதுப் புது விஞ்ஞான விளைவுகளைக் காண்கிறான். குமரிமுனையில் கடல் அள்ளிக் கொழிக்கும் மணலின் பல நிறங்களைக் காணும்போது, உள்ளம் துள்ளும்! சின்னஞ் சிறு குழந்தைகள், கருமை, செம்மை, பசுமை ஆகியவை போன்ற பல நிறங்கொண்ட மணலை அள்ளிச் சட்டைப் பைக்குள் போட்டுக்கொண்டு, ஆனந்தக் கூத்தாடுவதைக் காணும்போது, நாம், அலட்சியமாகவே இருக்கிறோம்!

அந்த மணல் குறித்து, நம்மவரிடம், புராணக் கதைகூட உண்டு.

'கலர் குங்குமம்' என்று கடைக்காரர் கொட்டி விற்கிறாரல்லவா, நம்முடைய மாதர்களுக்கென்று!

இதுபோல, சிவபெருமானின் தேவி, பார்வதி அம்மை அணிந்து கொள்ளும் 'கலர் குங்குமம்'தான், இந்த மணல் என்று நம்மவர், பெருமையோடு பேசிக் கொள்வதும், அதைக் காண, க்ஷேத்ராடனம் செய்வதுமாக இருக்கின்றனர்.

ஆனால், அந்த மணல், புத்தம் புதிய உலோகப் பொருளை அடக்கிக்கொண்டிருப்பதை, 'பார்வதி பாராயணம்' செய்யும் நம்மவர் அறியவில்லை—அறிவுலகந்தான் கண்டான்! அந்த உலோகத்துக்கு, இன்றைய உலகில் ஏற்பட்டிருக்கும் கிராக்கி, ஏராளம்! அதன் பெயர், டைடேனியம்!!

*

ரசாயன நிபுணரின் அலுமாரியில் குப்பையோடு குப்பையாகக் கிடக்கும் ஒரு களிம்புக்குத் திடீரென்று மகத்துவம் வந்துவிடுவதுண்டு. அதற்கிருக்கும் அபூர்வ சக்திகள் புலப்பட்டு, எங்கு பார்த்தாலும் அதன் பெயர் அடிபடுகிறது. அருவருப்புக்காளான பூஞ்சக்காளானிலிருந்து, புத்துயிரளிக்கும் பெனிஸிலின் தயாரிக்கமுடியுமென்று யாராவது கனவு கண்டிருப்பார்களா? சுமார் நூறு ஆண்டுகளுக்குமுன் நிலத்திலிருந்து எடுக்கப்படும் பெட்ரோலிய எண்ணெயிலிருந்து மண்ணெண்ணெயைப் பிரித்த பிறகு மற்றப் பொருள்களை வெட்டவெளியில் எரித்துவிடுவார்களாம். எங்கே 'லங்கா தகனம்' நடந்துவிடுமோ என்ற பயந்தான்! இப்போதென்றால் படாத பாடுபட்டு, அதில் கலந்துள்ள ஒவ்வொரு பொருளையும் பிரித்துப் பயனுக்கிக் கொள்ளுகிறார்கள்.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன் ரேடிய உலோகம் பிரித்தெடுத்த பின், எஞ்சிய தாதுப் பொருள்கள் தொழிற்சாலைகளுக்கு வெளியே குவிந்து கிடக்கும். இருந்தும் அதைப்பற்றி யாரும் அக்கறைப் படவில்லை. யுரேனியத்தின் மகத்துவம் அணு ஆராய்ச்சிகளால் வெளிப்பட்டு, யுரேனிய உலோகமும் அதிலிருந்து உண்டாக்கப்படும் ப்ளுடோனிய உலோகங்களும், அணுசக்தி உற்பத்திக்கு உபயோகப்படுவதும், அதனால் வைத்திய சிகிச்சைகளில் முக்கியமான கதிரியக்கம் கொண்ட உப பொருள்கள் கிடைப்பதுமான விஷயம் வெளியிடப்பட்டதும் அதற்குண்டான கிராக்கிக்கும் அளவேயில்லை. கேட்பாரற்றுக் கொட்டிக் கிடந்த அத்தனை தாதுப் பொருளுக்கும் பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப்பட்டது. இத்தகைய தாதுக்கள் அணுசக்திக் குழுவினரின் கட்டுப்பாட்டிற்கு அடங்கிவிட்டன. தற்போது, அடடா, ஒரு காலத்தில் வெளியே கொட்டிக் கிடந்ததா அது! அதில் ஒரு எலுமிச்சங்காயளவு நமக்குக் கிடைத்திருக்கக்கூடாதா என்று ஏங்குவோருண்டு. நாளடைவில் தங்கத்தின் மதிப்பு யுரேனியத்திற்கு வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

*

எத்தனையோ நோய்களுக்குச் சரியான மருந்துகள் தற்போது இல்லை. மருந்துக் கடையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள அத்[illegible] புட்டிகளிலுள்ள எத்தனையோ மருந்துகளின் அரிய பண்புகள் முற்றிலும் அறியப்படாமல் இருக்கலாம். இவை திடீரென்று பேரும் புகழும் பெறப் பாத்திரமாகின்றன.

தினசரிப் பத்திரிகைகளில் எத்தனையோ விஞ்ஞான அற்புதங்களைக் காணுகிறோம். சோதனைக்குழாயோடு நிற்கும் அவற்றை வழக்காற்றுக்குக் கொண்டுவர அரிய ஆராய்ச்சிகள் தேவைப்படுகின்றன. அடைத்த கண்ணாடிச் சிமிழில் விளக்கெரிந்ததும், வான வெளியில் விமானம் பறந்ததும் முதலில் நம்ப முடியாத அற்புதங்கள்தாம். அரை ரூபாய் ஒரு ரூபாய் கொடுத்து மின்சார பல்புகள் வாங்கி மாதக்கணக்காக அவை உழைக்கும்படியாகச் செய்யவோ, பறந்து செல்லவோ எளிதில் முடியும்படியாகச் செய்வதற்கு அதன் பின் அதிக ஆராய்ச்சிகள் தேவைப்பட்டன. இன்னும் தொடர்ந்து ஆராய்வதன்மூலம் இவற்றையே இன்னும் சிக்கனப்படுத்தலாம்; எளிய முறைகளை வகுத்துப் பெருவாரியான உபயோகத்திற்குக் கொண்டுவரலாம்.

நாம் நன்கறிந்தவை, இரும்பு, தாமிரம், வெள்ளீயம், காரீயம், துத்தநாகம், அலுமினியம், வெள்ளி தங்கம் போன்ற சில உலோக வகைகள். பாதரசமும் உலோகம்தான். அலுமினியம் வந்த புதிதில் அதன் விலை அதிகமாயிருந்தது நெப்போலியன் தன் விருந்தினர்க்கு அலுமினியத்தால் செய்யப்பட்ட முட்கரண்டிகளையும் தட்டுகளையும் வைத்து மதிப்புக் காட்டினன் என்பதும், தன் கீழ் வேலை செய்த உத்தியோகஸ்தர்களுக்குச் சாதாரண தங்கம் வெள்ளியாலான கரண்டிகளும் தட்டுகளும் வைக்கப்பட்டன என்பதும் நமக்குப் பயித்தியக்காரத்தனமாகப்படுகிறது. அதற்குப் பிறகும் கொஞ்சக் காலம் இந்த 'அரிய' உலோகத்தை ரயில் மூலமாக அனுப்ப மிக அதிகமான கட்டணம் விதிக்கப்பட்டதாம். ரூபாய் நாணயங்களாக உருவெடுத்துள்ள நிக்கல், முலாம் பூச உதவும் க்ரோமியம், மேலை நாடுகளில் ஆபரணங்களாக ஜொலிக்கும் ப்ளேடினம். மின்சார விளக்குகளில் ஒளிரும் டங்ஸ்டன் முதலியவற்றையும்பற்றிப் பலர் அறிந்திருக்கிறோம். இவை சர்வ சாதாரணமான உலோ

கங்களாகத் தற்போது திகழ்கின்றன. இன்னும், ரேடியம், யுரேனியம் என்றும் சிலர் காதில் விழுந்திருக்கும். பல உலோகங்களின் பெயர்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம், பார்க்கும் வாய்ப்பு நேர்ந்திராது. அவை ஏதோ சில முக்கிய வேலைகளுக்குமட்டும் பயன்படுவது ஒரு காரணம். புது உபயோகங்கள் தோன்றுமாயின் இவற்றின் நாமாவளிகள் எல்லோராலும் உச்சாடனம் செய்யப்படுகின்றன.

பின்னர் குறிப்பிட்ட கூட்டத்தைச் சேர்ந்த ஒரு உலோகத்தைப் பார்ப்போம். எஃகின் வன்மை, ஆபரணங்களாக மிளிரும் ப்ளேடினத்தைப்போலக் கறுத்துவிடாத சிறப்பு, டங்ஸ்டனைப்போலச் சூட்டைத் தாங்கி நிற்கும் திறன், ஏறக்குறைய அலுமினியத்தின் கனமின்மை இவைகளைக் கொண்ட டைடேனியம், அண்மையில் உபயோகத்திற்குக் கொண்டுவரப்பட்ட உலோகங்களுள் ஒன்று. நாற்பதாண்டுகளுக்குமுன் சுத்தமான நிலையில் இது தயாரிக்கப்பட்டபோதிலும் கடந்த ஓரிரண்டு ஆண்டுகளுக்குட்பட்ட காலத்திலே அந்த முறைகள் மிகவும் சீர்படுத்தப்பட்டன. சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன், வில்லியம் க்ரிகார் என்ற பாதிரி ஒருவர், கார்ன்வால் கடற்கரையில் உலாவும்போது அங்கிருந்த கரிய மணல் அவர் கருத்தைக் கவர்ந்தது. சோதனையின் பேரில், அது புது வகையான உலோக சமபந்தமான மணல் என்று கண்டார். இதே மணல் ரஷ்யாவில் இல்மென் மலைகளில் காணப்படுவதால் இதை இல்மோனைட் என்று தற்போது வழங்குகிறோம். இதே சமயத்தில் யுரேனியத்தைக் கண்டுபிடித்த ஜெர்மன் நிபுணர் ஹென்ரிச் க்ளேபராத் என்பவர், ருடைல் என்ற தாதுப் பொருளிலிருந்து அவ்வுலோகத்தைப் பிரித்தார். தாதுவிலிருந்து உலோகத்தைப் பிரிக்க அதிகக் கஷ்டம் தருவதால் கிரேக்கக் கதைகளில் காணும் பலமே உருவான டைட்டன்களின் பெயரை ஒட்டி டைடேனியம் என்று இதற்குப் பெயரிட்டார்.

காரீயம், செம்பு, துத்தநாகம் இவைபோன்ற சாதாரண உலோகங்களைக் காட்டிலும் இவ்வுலோகம் அதிக அளவில் பூமியில் இருக்கிறது. கரி, கந்தகம் இவற்றைக் காட்டிலும் அதிக அளவில் இருக்கிறது. உலகில் அதிகமாக இருக்கும் பல தனிப்பொருள்களின் வரிசையில் டைடேனியம் ஒன்பதாமிடத்தை வகித்தாலும் இதைப் பற்றி அதிக காலம்தெரியாமலிருந்ததற்குக் காரணம் உண்டு. மற்ற உலோகங்கள் பூமியில் குறைந்த அளவில் இருந்தாலும் அவற்றின் தாதுக்கள் குறிப்பிட்ட இடங்களில் சிதறிக் கிடப்பதால் அவைகளை எளிதாகப் பெற முடிகிறது. ஆனால் டைடேனியம் தாதுக்கள் மற்றப் பொருள்களோடு பரவலாகக் கிடக்கின்றன. இவற்றினின்றும் டைடேனியத்தைத் தனியாகப் பிரிப்பது கடினம். அதிர்ஷ்டவசமாக இல்மெனைட் மணல் குமரி முனைக் கரையோரங்கள், இலங்கை கடற்கரைகள் போன்ற இடங்களில் சற்றுத் திரண்டு காணப்படுகின்றன. பளபளப்போடு கூடிய இக்கருமணலில் டைடேனிய உலோகம் இரும்போடும் பிராணவாயுவோடும் கலந்துள்ளது. ருடைல் என்ற தாது கருமையும் சிவப்பும் கலந்ததுபோலிருக்கும். இதில் டைடேனியமும் பிராணவாயுவும் உள்ளன.

கரிய இம்மணலைச் சுத்தம் செய்தால் நல்ல வெண்மையும் மென்மையும் மிக்க டைடேனிய ஆக்ஸைடு கிடைப்பது விந்தையே. இதைப் பூச்சுகளில் உபயோகித்தால் ஒரே பூச்சு நல்ல வெண்மை தருகிறது. நாகவெள்ளை, ஈயவெள்ளை இவற்றைப்போலன்றி இப்பூச்சு எளிதில் மங்காமலும் விஷத்தன்மையற்றும் இருப்பதால் இது பெருவாரியான உபயோகத்திற்கு வருகிறது. இலேசான ஏர்மெயில காகிதங்கள் மெல்லியதாயிருந்தாலும் ஒரு புறம் எழுதுவது மறுபுறம் தெரியாமல் இருப்பதின் இரகசியம் அக்காகிதம் செய்யப்படும்போது நுண்மையான இப்பொடியைக் கலப்பதாகும். இப்பொடியின் நுண்மையை ஒட்டியே இதை ரப்பரோடு நிறத்திற்காகச் சேர்க்கப்படுகிறது. ரப்பர் இழுக்கப்பட்ட போதிலும் வெடிப்புகள் விடாமல் இருக்க இதன் நுண்மை பயனாகிறது. தெளிவான பிளாஸ்டிக் பொருள்கள் பிரகாசமாகக் காணப்படுவதற்கும் இதைக் கலப்பதுண்டு. சந்தன நிறங்கொண்ட எனாமல்களிலும் இது பயன்படுகிறது.

டைடேனிய வெள்ளையைக் கடுஞ்சூடு தரும் ஊது உலைகளில் உருக்கி வரும் தெளிவான மணி வைரத்தைத் தோற்கடிக்கும் ஒளிபடைத்ததாகும். வைரத்தின் ஒளி மதிப்பெண் 2 4 என்றால் இது 2.9 மதிப்புடையது. பட்டை தீட்டிவிட்டால் இம்மணி வைரத்தைவிட அதிக 'டால்' வீசும். இந்த மணியும்உறுதி மிக்கதாயினும் உறுதியில் இது வைரத்தைத் தோற்கடிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இம்மணிகளை டைடேனியா என்று அழைக்கின்றனர். இவற்றில் நாம் விரும்பிய நிறங்கொண்ட மணிகளையும் தயாரிக்கலாம். அறுத்தல் போன்ற வேலைகளுக்கு உறுதிமிக்க வைரத்தையும் ஆபரணங்களாகத் திகழ டைடேனிய மணிகளையும் ஏன் உபயோகிக்கக்கூடாது?

டைடேனிய ஆக்ஸைடின் உபயோகங்கள் இன்னும் பல உண்டு. அவற்றைவிட்டுப் பிற டைடேனிய உப்புகளைபபற்றிச் சற்றுப் பார்ப்போம். இவற்றில் சில வகைகள் பளிச்சென்ற நிறங்கள் கொண்டவை. துணிகளுக்குச் சாயமேற்றவும், இவை பயன்படுகின்றன. சில நெசவாலைகளிலும், காகிதம் உற்பத்தி செய்யுமிடங்களிலும் துணிகளும் காகிதக் கூழும் வெளுப்பதற்குச் சிறந்தவையாகப் பாராட்டப்படுகின்றன. டைடேனஸ்க்ளோரைடு துணிகளில் படிந்த இரும்புக் கறையைப் போக்குவதில் நிகரற்றது. டைடேனிய க்ளோரைடு என்றஇன்னொரு திரவரூபமான வகை காற்றிலுள்ள ஈரத்தோடு கலந்து புகையும் தன்மையுடையது. யுத்தகாலங்களில் துருப்புகளின் நடவடிக்கைகளை மறைகக இந்த அடர்த்திமிக்க வெண்புகை உண்டாக்குவதற்கு இதை உபயோகிப்பார்கள். டைடேனியா ஹைட்ரைடு என்ற பொருளைக்கொண்டு உலோகத்தையும்கண்ணாடியையும் ஒட்டும் புதுமைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

டைடேனிய உலோகத்தையே எடுத்துக்கொண்டால், இதுசூடான நிலையில் பிராணவாயுவோடும் வெடியுப்பு வாயுவோடும் கரியோடும் எளிதில் கலந்து விடுவதால் காற்று நீக்கிய வெற்று வெளியில் சுத்தமாக உலோகத்தைத் தயாரிக்கும்

முறைகள் மெதுவாகவே வகுக்கப்பட்டன. இக்குணத்தை யொட்டியே எஃகு தயாரிக்கும் உலைகளில் எஃகைச் சுத்தி செய்யவும் வெள்ளியைப்போன்ற பளபளப்பும் வெண்மையுமுடைய இவ்வுலோகம் உதவியாயிருந்தாலும் சற்று வெட்டையானது. பழுக்கக் காய்ந்தால் இக்குணம் மறைந்துவிடும். இப்போது அடித்து வளைத்தோ, உருளைகளால் அழுத்தியோ வேண்டிய உருவில் செய்து கொள்ளலாம்.

இவ்வுலோகம் மற்ற உலோகங்களோடு தக்க அளவுகளில் கலந்த கலவைகளாகவே பெரிதும் பயன்படுகிறது. விமானத்தின் பாகங்களும் மின்சாரக் கருவிகளின் சில பாகங்களும் டைடேனியக் கலவைகளால செய்ய வேண்டியுள்ளன. அல்ட்ரா வயலெட் விளக்குகளின் காந்தியை அதிகப்படுத்த மின்சாரம் பாயும் முனைகள் டைடேனியம் கலந்த கலவையால் செய்யப்படுகின்றன. டைடேனியம் சிறிது கலந்த எஃகு கடைசல் வேலைகளில் எளிதில் மழுங்காத முனைகள் செய்ய உதவுகிறது. அதிக சூட்டிலும் நெகிழ்ந்து உருக்குலையாமல் தாங்கி நிற்கும்படி, வாயு டர்பைன்களின் சுழலும் பாகங்களிலும், ராக்கெட் விமானங்களின் எரிவாயுக்கள் சீறிடும் பின் பகுதிகளிலும் டைடேனியம் சேர்ந்த கலவைகளின் உபயோகம் இன்றியமையாதது. சில அலுமினியக் கலவைகளிலும் இது சேர்க்கப்படும். குறிப்பிட்ட வேலைகளுக்குக் குறிப்பிட்ட உலோகங்களும் அவற்றின் கலவைகளும் எடுத்தவை இத்துறையில் டைடேனியமும் ஒன்று.

*

இத்தகைய அரும்பொருள், பெருமிதமான அளவில், திருவிட முனையில், கிடக்கிறது! ஆனால் நாமோ அதன் பயனை அறியாதவர்களாகவே இருக்கிறோம்.

'நம் நாடு'
(தமிழ் வார இதழ்)
ஆசிரியர்:- வி. எம். ஜான்
ஜூலை 22 முதல் வெளிவருகிறது.
'நம் நாடு'
நாகர்கோவில்

# ★ இருவர் ★

## காமாக்ஷி

"காமாக்ஷிக்கு என்னடி, கற்கண்டென கணவன் வாய்ப்பான்; அவள் அழகிற்கே நீ, நான் என்று போட்டி போட்டுக்கொண்டு வருவார்களே" எனத் தெருவார் பேசிக்கொள்வார்கள்.

"தங்கச் சிலையடி காமாக்ஷி! தங்கச்சிலை பேசாது; நம் காமாக்ஷி பேசுவாள், ஆடுவாள்; அவளுக்கு வாய்க்கும் கணவனின் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம்" என, என் தோழிகள் பேசிக்கொள்வார்கள்.

"சிடுசிடுத்த முகத்தையே நான் பார்த்ததில்லை — சிரித்த முகத்துடனேயே காட்சியளிப்பாள்; சுடுசொல் பேசி ஒரு நாளும் கண்டதில்லை; சோம்பி இருப்பதே கிடையாது—தங்கமான குணம்" இப்படி என் சுற்றத்தார்கள் என்னைப் போற்றிப் புகழ்வார்கள்.

இப்படிப்பட்ட புகழ் வார்த்தைகளைக் கேட்ட என் பெற்றோர்கள் பூரிப்படைந்தனர்.

பூரிப்பு மங்கியது; பெருமூச்சு விடத் தொடங்கினர், பெற்றோர்கள். பணமில்லாத காரணத்தால் மணம் செய்துகொள்ள முற்படவில்லை, சுற்றத்தினர் 'பஞ்சைகளிடமா பெண்கொள்வது?' என்ற பரிகாசச் சொல்லை வீசி நின்றனர்.

பருவமடைந்து ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டன. பரிவுகொள்வோர் எவரும் இல்லை. பாலைவனத்தில் பெய்யப்பட்ட மழையென ஆயிற்று என் பருவமும் அழகும்.

இப்படி அவதிப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில்தான், சந்தப்பேட்டை என்ற கிராமத்திலிருந்து வந்த சுந்தரம் என்பவருக்கு, நான் மணம் செய்விக்கப்பட்டேன்.

மணம் நடைபெற்றது — ஆனால், அழகி என வர்ணித்த பெரியோரும், குணவதி என்று போற்றி, பணமில்லாத காரணத்தால் பஞ்சைகளெனத் தூற்றி மணம் செய்துகொள்ள முன்வராத சுற்றத்தினரும் வரவில்லை, வராதது மட்டுமல்ல வம்பளக்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

"நம் ஜாதி என்ன? அந்தச் சுந்தரத்தின் ஜாதி என்ன? அவர்களுக்கும் நமக்கும் கொள்வினை கொடுப்பினை கிடையாதே அவர்கள் முதலியார்தான் என்றாலும், எந்தத் தாத்தார்? அவர்களிடம் இவர்கள் சம்பந்தம் செய்துகொள்ளலாமா?" எனக் கேள்விக் கணைகளைப் பூட்டி ஜாதிக் கட்டுப்பாடும் செய்துவிட்டார்கள்.

இந்தக் கட்டுப்பாடு, என் அண்ணனின் காதலுக்குத் தடை போட்டுவிட்டது. கண் கலங்கி நிற்கவேண்டியவனுன், என் அண்ணன்.

## இரத்தினம்

கண்கலங்கித் தவித்தேன் — என் தங்கையின் வாழ்வு பாழ்பட்டு தாழ்நிலையில் சென்றுவிடுமோ என்று. சுந்தரத்தால் சுகம்பெற்ருள். களிப்பெய்தினேன் - நானும் கடிமணம் செய்து காதல் மங்கையோடு இன்புற்றிருக்கலாம் என்று.

களிப்பு கருகியது. கட்டுப்பாடு செய்துவிட்டார்கள்—ஜாதிக் கட்டுப்பாடு—தங்கையை தாழ்ந்த ஜாதியில் மணம் செய்துவிட்டோம் என்ற காரணம்கூறி. காதல்கொண்டிருந்த அத்தை மகளைக் கண்ணெடுத்தும் பார்க்கக்கூடாது என்று பலமான உத்தரவு போட்டுவிட்டார்கள். பதைத்தேன் நான்—பரதவித்தாள் என் அத்தை மகள், அஞ்சுகம். வேதனைப்பட்டோம்; வேறு வழி கிடையாதே, ஜாதிக் கட்டுப்பாட்டைக் கடப்பவர்களுக்கு. இதை இந்தச் சமுதாயம் ஏற்படுத்திய சட்டமாயிற்றே!

சட்டத்தைக் காட்டி, கட்டுப்பாடு செய்து காதலை மாய்க்கும் இக்கயவர்கள், என் தங்கை ஆறுண்டாக பருவமெய்திருந்தபொழுது பஞ்சைகளெனப் பரிகசித்து நெஞ்சில் இரக்கமில்லாமல் ஏசினர்! அன்று ஏனென்று ஏறெடுத்துப் பாராதவர்கள், இன்று ஏன் இப்படிச் செய்தாய் என்று கேட்கிறார்கள். இது என்ன முறையோ? இது என்ன சட்டமோ? இந்தச் சட்டத்திற்குப் பக்கமேளம் கொட்டும் இது என்ன சமுதாயமோ?

கேலியும் கிண்டலும் கண்ட இடங்களில் கிளம்பின! ஏசலும் ஏளனமும் எல்லாத் திசைகளிலிருந்தும் நோக்கி வந்தன. என்ன செய்வது இதற்கு என யோசித்தேன்; ஒரு முடிவுக்கும் வந்தேன்.

முடிவு—ஒரே முடிவுதான்! மூடச் சமுதாயத்தின் முனகலை ஒழிக்க—வாயை அடக்க—விழிப்பைத் திறக்க சாவுதான் சிறந்த முடிவு!

சந்தைப்பேட்டை அடைந்தேன்; காமாக்ஷியைக் கண்டேன். அவள் கண்ணீர்விட்டாள்—என் நிலையினை எண்ணி. தன் கணவன் ஒரு குடிகாரன், சூதாடி, குடும்பப் பொறுப்பற்றவன் என்ற தன் நிலையினைக் கூறிக் குமுறினாள்.

காதலால் தவிக்கும் நான்.

கயவனிடம் சிக்கிச் சீரழியும் தங்கை.

ஜாதிக் கட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்ட குடும்பம்.

இரவு முழுவதும் இவைகள் யாவும் என் கண் முன்னே நிழற்படமென காட்சிதந்துகொண்டிருந்தன

பொழுது புலர்ந்ததும், காமாக்ஷியை ஊருக்கு அழைத்துச் செல்வதாக சுந்தரத்திடம் கூறி, காமாக்ஷியை அழைத்து வந்தேன்.

**காமாக்ஷி**

நான் களிப்புடன் கிளம்பினேன், அண்ணனுடன்—பிறந்த ஊருக்கு. வரும் வழியெல்லாம் எங்கள் வேதனை வாழ்வை, ஒருவருடன் ஒருவர் பரிமாறிப் பேசிக்கொண்டு வந்த காரணத்தால், எத்திக்குச் செல்கிறோம் என்பதை நான் அறியவில்லை. பேச்சு நின்றதும் கவனித்தபொழுது, பவழவேற்காட்டுக்குச் செல்லும் பாதை என்பதை அறிந்தேன்.

"ஊருக்குத்தானே போகிறோம்? ஏன் இந்த வழியிலே வந்துவிட்டாய்?" என என் அண்ணனைக் கேட்டேன், என்னைப் போன்றே அவனும் பாதையைக் கவனிக்கவில்லையோ என எண்ணி.

அவன் கண்கள் கலங்கின பதில் சொல்லவில்லை.

"என்ன அண்ணா! ஏன கலங்குகிறாய்! நீ ஊருக்குப் போகவில்லையா? எங்கே போகப்போகிறாய்?" என நான் மீண்டும் கேட்டேன்.

அவன் மௌனம் சாதித்தான்.

**இரத்தினம்**

எங்கே என்னை அழைத்துச் செல்கிறாய், அண்ணா? என என்னைக் கேட்கிறாள் என் தங்கை. நான் எப்படிச் சொல்லுவேன்—உன்னை ஜாதிச் சண்டை சமூகச் சண்டை அற்ற சாவு பூமிக்கு அழைத்துச் செல்கிறேன் என்று. அவள் வாழ்ந்தது போதும் என்றிருந்த நான், அவளை சாவை நோக்கி அழைத்துச் செல்கிறேன் என்று கூறுவது.

கூறாமல் என்ன செய்வது? சுற்றத்தார் தூற்ற, கொண்ட கணவனோ குடிபப் பொறுப்பற்றவனாய்த் திரியும் தங்கையின் வாழ்விலே இனி இன்பம் ஏது? காதலுக்குக் கதவடைப்புச் செய்துவிட்ட எனக்குந்தான் இன்பம் ஏது. இனி? இன்பமற்ற வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேல்லவா?

இறப்பது குற்றமல்லவா என்று கேட்பீர்கள். யோசித்துக் கூறுங்கள் இது யார் குற்றமென்று. ஏழை என்று எள்ளி நகையாடி, என் தங்கையை மணம் செய்துகொள்ள முன்வராத உறவினர்கள் குற்றமா? அந்த உறவினர்கள் மனதிலே ஜாதி என்ற பாகுபாட்டைப் புகுத்தி வைத்திருக்கும் சமுதாயத்தின் குற்றமா? யார் குற்றம் எங்கள் சாவின் முடிவிற்கு? என்று நீங்கும் இந்த நாட்டை விட்டு, இக்குற்றம்? எங்களைப்போன்றவர்கள் இறந்த பிறகாவது இக்குற்றம் நீங்குமா?

என் தங்கைக்கு ஒருவாறு என் நிலையைத் தெரிவித்தேன்.

மறுப்பாள் என எதிர்பார்த்தேன்—மன மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டாள், என் சொல்லை.

"தடும்பத்துக்கும் என்னால் இழிசொல்! என் வாழ்விலும் இன்பம் இல்லை!! உன் காதலுக்கும் இடமில்லை!!! இந்த வாழ்வு வாழ்வதைவிட இறப்பதே மேல்" அண்ணா எனக் கூறினாள்.

(4-ம் பக்கம் பார்க்க)

# தயாராகுங்கள்! தயாராகுங்கள்!!

டால்மியாபுரம் போராட்டக் குழுத்தலைவர் தோழர் மு. கருணாநிதி, திருச்சி மாவட்ட முழுமையும் சுற்றுப் பிரயாணம் செய்து, திரும்பியிருக்கிறார், மாவட்டத் தோழர்களுடன்.

சிற்றூர்களிலும், பேரூர்களிலும் அவர்கண்ட ஆர்வத்தைச் செப்பும் போது, நமது சிந்தையெல்லாம் பொங்கிற்று—ஆர்வத்தால்.

மமதை கொண்ட வடநாட்டு ஆதிக்கத்தின் திமிர்ச் சின்னம்—'டால்மியாபுரம்; அந்தச் சின்னத்துக்கு, தி. மு. க. தரும், எச்சரிக்கையே, டால்மியாபுரம் அறப்போர்.

இரும்புப் பிடிகளில் சிக்கி, அவதிப்படும் திராவிடத்தை விடுவிக்கும், பெரியதோர் பொறுப்பின் ஒரு கட்டம், அறப்போர்.

ஆகலால்தான், கூர்கிராமங்களில் அகமகிழ்வும் தொழிலாளரின் இதயத்தில் ஒரு குதூகலமும், காண்கிறோம்—எங்கும்.

'டால்மியா' — ஒரு பணத் திமிங்கிலம்.

'டால்மியா' — ஒரு வடநாட்டுச் சின்னம்.

'டால்மியா' — ஒரு ஆதிக்கச் சின்னம்.

அதனை அழிக்கும், பெரும் படை, திரண்டு கொண்டுள்ளது.

தேதியும் ஜூலை 15-என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

திண்தோள் வீரர்கள்—திருச்சி மாவட்டத்திலே நின்றபடி தோழர் கருணாநிதி, திராவிடத்தின் சிங்க இளைஞர்களைப் பார்க்கிறார்!

வடநாட்டு ஆதிக்கச் சின்னமோ, நம்மையும் நாட்டையும் கேலியோடு பார்க்கிறது! — எச்சரிக்கை விடுத்தோம்— தீர்மானம் அனுப்பினோம் — கண்டனத்தீர்மானங்கள் அனுப்பினோம். பதில்லை! நம்கோரிக்கைக்கு பதில்லை!! 'டால்மியாபுரம்' கர்வத்தோடு காட்சி அளித்தபடியே, இருக்கிறது.

'வடநாட்டு ஆதிக்கத்' திமிரை அடக்க—வளர்ந்து வரும் முதலாளித்துவத்துக்கு சாவு மணி அடிக்க—தயாராகுங்கள்! தயாராகுங்கள்!!

# உல்லாச ஊஞ்சல்—அங்கே!

ஜாதி, ஏழை — பணக்காரன். இந்தப் பெரும் வேற்றுமைகளின் விளைவால், வாலிப மலர்கள், விஷ மருந்தி மாய்வதையும், கிணற்றிலே பிரேதங்களாவதையும், 'காதலர்கள் தற்கொலை' என்கிற செய்தியையும், நாம் அடிக்கடி கேள்விப்படுகிறோம்.

'காதல் புரிந்தோரை, வாழச்செய்வீர்!' — என்பதை விளக்க நம்முடைய எழுத்தாளர்களின் பேனாவிலிருந்து, எத்தனை யெத்தனையோ நாவல்கள், புறப்பட்டிருக்கின்றன. கீழ்ஜாதிக்காரனைக் காதலித்தபெண் ஏழையொருத்தியை இல்லறத் துணையாக மேற்கொள்ள முயன்ற வாலிபன்—இவர்களுக் கிடையிலே ஜாதி—பணம், ஆகியவை குறித்துப் பேசியவண்ணம் தடை எழுப்பும் பெற்றோர், ஆகியவர்களைக் குறித்து இதுவரை வெளிவந்துள்ள நாவல்கள் மட்டுமல்ல, நல்அறிவுரை கூறும் நூல்களும் ஏராளம்.

ஆனால், நாம் எதிர்பார்க்கும், விளைவு, தமிழ்நிலத்தில், வளரவில்லை — வயோதிகத்துக்கு வளைந்து கொடுத்து, ஜாதியாசாரம் பேசும் தந்தை, மாடியில் உலவும் 'காதலி'யைக் காணமுடியாது நொந்து போன காதலன், இவர்களிடையிலே வளரும் வார்த்தைத் தடிப்பு, சிறை! கண்ணீர்! சாவு! — இவ்விதம் போய்க்கொண்டிருக்கிறது. இங்கே இங்கிலை! இதோ இரண்டு காட்சிகள் —இவை, 'குருஸ்டு'வின் கொள்கை போற்றும் நாட்டிலே!

அமெரிக்க மாவீரராக இருந்து மறைந்துபோன ரூஸ்வெல்டின் பேத்தி—நிறைய சொத்துள்ளவள தனக்கு, கணவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் ரூஸ்வெல்டின் பேத்தியென்றால், சீமான்வீட்டு வாலிபன்—பூமான்வீட்டுச் செல்வன்—அரசியல் அதிகாரியின் புதல்வன்—இவர்களில் யாரையாவதுதான் தேர்ந்தெடுத்திருப்பார், என்று கருதுவர் பலர். அவர் தேர்ந்தெடுத்துள்ள வாலிபர் நியுயார்க்கில் 'பார்பர்ஷாப்' வைத்திருக்கும் ஒருவருடைய மகனுகும்! ரூஸ்வெல்டின் பேத்தி — பார்பர் ஷாப்' வைத்திருப்பவரின் மகன். 'அவரே என காதலர்' என்கிறாள் பெண். பெற்றோரும் மறுக்கவில்லை! சம்மதம் தந்துவிட்டனர்!!

அமெரிக்காவில், இது — இங்கிலாந்திலோ, இதைவிடக் குறிப்பிடத்தக்க திருமணம் ஒன்று நடைபெறப்போகிறது. இந்தியாவுக்கு சுயராஜ்யம் வாங்கித்தர மிகப் பாடுபட்டவரும், அட்லீ சர்க்காரின் பொக்கிஷ மந்திரியாக இருந்தவரும், சிறந்த பொதுநல வாதியும், அண்மையில் காலஞ்சென்றவருமான சர்ஸ்டாபோர்டுகிரிப்ஸ் அவர்களின் மகள், தன்னுடைய கணவனைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். விரைவில் திருமணம் செய்து கொள்ளப்போகும் அத்தம்பதிகளின் புகைப்படங்கள், உலகிலுள்ள எல்லா ஏடுகளிலும் வெளிவந்துள்ளன—சில ஏடுகளில். கேலி! பல ஏடுகளில் பாராட்டு!! அந்தப் புகைப்படத்தைக் காணும்போது, 'தந்தைக்கேற்ற புதல்வி'யாகத் திகழும் அந்தச் செல்வியைப் பாராட்டத் தூண்டும். பிரிட்டிஷ் அரசவையில் பெரும் புகழுடன் விளங்கிய ஒருவரின் மகளென்றால், நிச்சயம், யாராவது ஒரு கோமகனையோ, பிரபுவின் புதல்வனையோ, மணம் செய்யத் திட்டமிட்டிருப்பாள் என்று எண்ணத் தோன்றும் அவளது காதலன, கோமகனல்ல—பிரபுவின் புதல்வனுமல்ல—'காட்டுமிராண்டிகளின்' தலைவனுடைய மகன்! ஆமாம், ஒரு நீக்ரோ!! வெள்ளைக்கார ஜாதியைச் சேர்ந்த—கதிதுப் உலகம் புகழும் ஒரு தலைவனுடைய மகளான — இச் செல்வி, 'காட்டுமிராண்டி' எனத் தம்மால் கைாண்டி செய்யப்படும் நீக்ரோ ஒருவனைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறாளென்றால், வெள்ளையர் உலகம் திடுக்கிடக்கூடிய செய்திதானே? 'மாவ்—மாவ்', பயங்கரம் என்ற பெயரைச்சொல்லி, நீக்ரோக்களை, சுட்டு வீழ்த்திக்கொண்டிருக்கிறது — வெள்ளையர் உலகம். 'காணச்சகிக்காத கூட்டம்' என்று கூறி, சட்டத்தால், கொட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால், கிரிப்ஸின் செல்வி, வெள்ளையர் உலகுக்கு, சவால் விடுத்திருக்கிறார்! திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று செய்தியை மட்டுமல்ல அவர் வெளியிட்டது— தானும், தன் கருப்புக் காதலனும் குதூகலமாகயிருக்கும் படமொன்றையும் பத்திரிகைகளிலெல்லாம் வெளிவரச் செய்துள்ளார். நீக்ரோ மணமகன், இலண்டனில் படித்துக்கொண்டிருப்பவராம்! அழகான செல்வி அமர்ந்திருக்க — அவளது தோளில் கைபோட்டவண்ணம் பாரதிதாசன் கவிதைகளில் வருமே 'சிறு காற்றும் புகாதபடி தழுவிக்கொண்டான்!' என்பதாக, அதை நினைவூட்டுவதுபோல சாய்ந்துகொண்டிருக்கும் — ஒரு படத்தையும் வெளியிட்டுள்ளார். அந்தக் காட்சி, நிறவெறித் திமிர் கொண்டலையும் வெள்ளையர் கண்களில் அனல் கக்கச் செய்யும்! ரூத் வில்லியம்ஸ் என்ற வெள்ளை மாதை மணந்த செரட்ஸிகாமா என்கிற நீக்ரோ மன்னனைப் படாதபாடு படுத்திவரும் வெள்ளையர் உலகமாயிற்றே — கிரிப்ஸின் செல்வி மீது கிண்டல் கணைகளை, வீசாமலிருக்குமா?—'எதற்தும் அஞ்சேன்!' எனப் படமூலம் பதில் தருகிறார், செல்வியார்.

இந்தப் படத்தைக் காணும் போது, நம்மையறியாமலே வாழ்த்துக்கள் குவிக்க விரும்புகிறது, இதயம்.

சீமாட்டிக்கு ஏழை! 'இழிகுலத்தவன்' தோளில் ஒரு ஏந்திழை!!— இங்கோ—காதலைத் தீய்த்த கட்டுப்பாடு—வாழ்வைத் துண்டித்த ஜாதியாசாரம் — மணமக்களைப் பிரித்த ஏழை பணக்காரன் வித்யாசம். குளத்திலே பிணம்! கயிற்றிலே பிரேதம்! விஷச் சாவு!!

என்று மாறுமோ—இளங் காதலர்களின உல்லாச ஊஞ்சல், அவர்தம் இஷ்டம்போல ஆடுமோ!!!

★

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியுந்தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒருவாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

# சென்னை மாவட்ட
# தி.மு. கழக இரண்டாவது மாநாடு

**சென்னை-நேப்பியர் பார்க்கில், ஜூலை 11, 12 தேதிகளில்**

**பாண்டியன் பந்தலில், தேசிங்கு அரங்கில் நடைபெறும்.**

11—7—53 சனிக்கிழமை

## சமூக சீர்திருத்த மாநாடு

தலைவர்: **எஸ். வி. லிங்கம்**

திறப்பாளர்: **சிதம்பரம் ஆர். பாலகுருசாமி**

கொடியேற்றுபவர்: **பொற்செல்வி இளமுருகு**

12—7—53 ஞாயிற்றுக்கிழமை

## அரசியல் மாநாடு

தலைவர்: **அருப்புக்கோட்டை சிவ. சண்முகசுந்தரம்**

திறப்பாளர்: **நெல்லை வீரபாகு**

இரண்டு நாள் மாநாட்டிலும்

**பொதுச்செயலாளர் அண்ணாதுரை, கழகப் பேச்சாளர்கள், கலைஞர்கள் சொற்பொழிவாற்றுவர்.**

**'வேலைக்காரி'—'பரப்பிரம்மம்'**

நாடகங்கள் நடைபெறும்.

கே. எம். கண்ணபிரான்,
வ. கு. தலைவர்.

எ. ஆர். சேஷாசலம், வ. சேயசந்திரன்,
செயலாளர்கள்.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press.
95, Tirukkachinambi St., Kancheepuram.